

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 18ம் நாள் நிறைமதி (03-07-2023 திங்கட்கிழமை) வெளியீடு +94 21 221 2739


## சுந்தரர் குருபூசை



கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 10ம் நாள் (26-07-2023) ஆடிச் சுவாதி நாண்மீனில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை நாள் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தில் இடம்பெறும்.

# அறநெறிப் பாடசாலைகளின் ஆழமான தேவைகளை தமிழ்பேசும் மக்கள் தூரநோக்குடன் சிந்திக்கவேண்டும்



ஒரு இனத்தின் வளர்ச்சியின் படிகள் தனியே பொருளாதாரமோ, கல்வியோ, மருத்துவமோ அல்லது அரசியல் வெற்றியிலோ மட்டும் சார்ந்தவை அல்ல. இவற்றுடன் சேர்ந்து, ஒரு இனத்தின் பண்பாட்டு வளர்ச்சி மற்றும் பண்பாட்டு எழுச்சியும் மிகவும் முக்கியமானது. வடமாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரை போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டெழும் பொழுது மீள்கட்டுமானம் என்ற குடைக்குள் பண்பாட்டினையும் சேர்த்துக் கொண்டுபோகவேண்டிய தேவை இருக்கின்றது என்பதனை மறந்துவிடக்கூடாது.

கல்வி என்பது வெறுமனே, 3 பாடங்களில் அதியுயர் சித்திகள் எடுத்து பொறியியலோ, மருத்துவமோ, கணக்காளர்களாக அல்லது இலங்கை நிர்வாக சேவையில் மிளிர்வதோ அல்ல. இவை எல்லாவற்றிற்கும் மேலாக முதலில் சமூகம், நாடு, பிறர்நலன் சார்ந்த சிந்தனையுடன் பிள்ளைகளை அறவழியில் வளர்ப்பதே அவர்களை முழு நிறைவான மனிதர்களாக்கும். தற்போதுள்ள சமூக சீர்கேடுகளுக்குத் தப்பி வாழவேண்டுமெனில் நிச்சயம் மாணவர்களுக்கு அறநெறிக் கல்வி அவசியம். நான்மறைகளான அறம், பொருள், இன்பம், வீடு என்ற வழியிலே நிறைவாக வாழ்ந்தவர்கள், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்று வள்ளுவர் கூறுகிறார். இப்படியான ஒரு வாழ்க்கையை உங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கவேண்டும் என்ற எண்ணப்பாடு உங்கள் ஆழ்மனதில் உதிக்கவேண்டும்.

வடக்கு மாகாணம் தவிர்ந்த, இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் ஓரளவு அறநெறிப்பாடசாலைகள் சிறப்பாக இயங்குகின்றது என்று சொல்லலாம். குறிப்பாக தென்மாகாணங்களில், பௌத்த மதத்தினை பின்பற்றும் சிறார்கள், அவர்களின் நெறியில் எவ்வளவு ஆழமாக நிற்கின்றனர் என்பதை ஒரு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். ஞாயிற்றுக் கிழமைகளில் தூய வெள்ளாடை அணிந்து அவர்கள் பௌத்த மரபில் இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கு செல்கிறார்கள். தங்கள் பண்பாட்டினை உணர்ந்து அதனை உள்வாங்கிக்கொள்கிறார்கள். பெற்றோரை மதிக்கும் பண்புகளை இதனூடு பெறுகின்றனர். கல்வியிலும் அவர்கள் இன்று சிறந்து விளங்குகின்றனர்.

இதனை ஆழமாகச் சிந்தித்து, இளம் பிள்ளைகளுக்கு வாழ்வில் அறத்தை உணர்த்தி, அதனூடு கல்வியைக் கொண்டு செல்ல வேண்டும். அந்தவகையில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறுவர்களுக்கான ஞாயிறு விடுமுறை அறிவிப்பை வரவேற்று, அது முழுப்பலனையும் பெற நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்கவேண்டும். இதனை கருத்தில் கொள்ளாது வகுப்புகள் வைப்பவர்கள் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை ஏனெனில் அனைவருக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளையும் அறநெறியில் வாழவைக்க வேண்டும் என்ற சிந்தனை நேரம் தாழ்த்தி அவர்களுக்கும் வரும். யாழ் மாவட்டத்தில் பல அறநெறிப் பாடசாலைகள் தொடங்கவேண்டும். அதனை பாடசாலை அதிபர்கள் முன்னின்று செயற்படுத்தவேண்டும். இவற்றிற்கான உதவிகளை இந்து கலாச்சாரத் திணைக்களம் நிச்சயம் செய்ய முன்வரும் என்பதில் ஐயமில்லை. யாழ் மாவட்டத்தில் எத்தனை போதைப்பொருள் அடிமைத்தனம், எத்தனை தற்கொலைகள் எத்தனை தடம் புரள்வுகள். இவைகள் வந்தபின் அழுவதை விடுத்து வருமுன் காக்க அனைவரும் முன்வரவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

## பேரூராதீனத்தில் தெய்வத்தமிழ் ஆகமப் பாடசாலை கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன




பேரூராதீனத்தினால் தொடங்கப்படவுள்ள தெய்வத்தமிழ் ஆகமப் பாடசாலையில் சேர விரும்புபவர்கள் ஆக 25ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பேரூராதீனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப் பில் கூறப்பட்டிருப்பதாவது:


கோவை மாவட்டம், பேரூரில் தமிழ்க் கல்லூரியை 1953-இல் தொடங்கிய அப்போதைய பேரூராதீன குருமுதல்வர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அனைவரும் அர்ச்சகராக வேண்டும் என விரும்பினார். தற்போதைய ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் தமிழ்நாடு அரசின் இந்து சமய உயர்மட்டக் குழு உறுப்பினராக இருப்பதுடன், அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் திட்டத்துக்கு பொறுப்பாளராகவும் உள்ளார். அந்த வகையில், முந்தைய ஆதீனத்தின் எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு பேரூராதீனத்தில் தெய்வத் தமிழ் ஆகமப் பாடசாலை தொடங்கப்பட உள்ளது.

இது ஓராண்டு சான்றிதழ் படிப்பாகும். திருமுறை, சாத்திரங்கள், தமிழ்நெறி வழிபாடு, கோயிற் கலை ஆகியவை கற்றுக் கொடுக்கப்படும். 5ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற, 12 வயதுக்கு மேற்பட்ட இருபாலரும் இதில் சேரலாம். உணவு, சீருடை, தங்கும் இடம் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். பாடசாலையில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதம் இந்திய ரூ.1,250 ஊக்கத் தொகை வழங்கப்படும். இதில் சேர்ந்து பயில விரும்புபவர்கள் ஆக 25ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். இலங்கையில் இருந்து சென்று பயிலும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தினர் போக்குவரத்துக்குச் செலவுகளை பொறுப்பேற்பர். (தென்னாடு +94 (70) 770 1111)

விண்ணப்பம் மற்றும் கூடுதல் விவரங்களுக்குப் பொறுப்பாசிரியரை (வே.தினேஷ்) +91 96988 16416 என்ற எண்ணில் தொடர்புகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலம்

## இணுவில் அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் பெருந்திருவிழா ஆடித் திங்கள் 5ம் நாள் (21-07-2023) ஆரம்பம்



சீரும் திருவும் பொலியும் ஈழமணித் திருநாட்டில் யாழ் நகரின் வடபால் சிவநெறியும் செந்தமிழும் செழித்து வாழும் இணுவையம்பதியுறை அருள்மிகு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலிலே பெருந்திருவிழா, நிகழும் மங்கல வருடம், கடகத் திங்கள் 5ம் நாள் (21-07-2023) முதல் 17ம் நாள் (02-08-2023) வரை நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இப்புண்ணிய நாட்களில் எம்பெருமானை வழிபட்டு இறையருளைப் பெற்றுய்யுமாறு சிவனடியார்களை அழைக்கிறார்கள் சைவநெறிக் கூடம் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் குழுவினர்.

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக தமிழிலே கருவறை முதல் சுற்று சந்நிதிகளிலும் தமிழ் மந்திரங்கள் ஒலிக்க பூசைகளை அறிமுகப்படுத்தியவர்கள் சைவநெறிக் கூட ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் குழுவினர் என்றால் மிகையாகாது.

**கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடு அமர்ந்து**
**பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை**
**மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழி போல்**
**எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ?**

**- திருவிளை. புராணம் 57**

திருச்சிற்றம்பலம்

# வற்றாப்பளை வைகாசிப் பொங்கலில் பல்லாயிரக்கணக்கானோர் கூடினர்



ஈழத்திருநாட்டில் கடல் நீரில் விளக்கெரியும் அற்புதத் திருத்தலமாக போற்றப்படுகின்ற வரலாற்று சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருக்கோயில் வைகாசித் திங்கள் பொங்கல் திருவிழா கடந்த வைகாசித் திங்கள் 23ம் நாள் (06-06-2023) அதிகாலை திருவருளுடன் நிறைவு பெற்றது.

வட மாகாணத்தில் கண்ணகி அம்மன் வழிபாட்டுக்கு சிறப்பு பெற்ற திருத்தலமாக வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருக்கோயில் திகழ்கின்றது. இத்திருக்கோயிலின் பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, 7 நாட்களாக கடல் தீர்த்தத்தில் ஏற்றப்பட்டிருந்த விளக்கு மற்றும் மடை பண்டங்கள் என்பன காட்டு விநாயகர் திருக்கோயிலில் இருந்து முதல் நாள் (05-06-2023) அதிகாலை வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருக்கோயிலிற்குளடுத்து வரப்பட்டன. அதனையடுத்து நள்ளிரவு பாரம்பரிய முறைப்படி அம்மனுக்கான பொங்கல் திருவிழா ஆரம்பமாகி பத்தியாக நடைபெற்றது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான பத்தர்கள் வருகை தந்து, தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியிருந்தனர். வைகாசித் திங்கள் 23ம் நாள் (06-06-2023) அதிகாலை ஐயன் மடையுடன் வளிவொட்டிவிடும் நிகழ்வுடன் வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் திருக்கோயில் வைகாசித் திங்கள் பொங்கல் திருவிழா திருவருளுடன் நிறைவு பெற்றது.

திருச்சிற்றம்பலம்

## மாணிக்கவாசகர் குருபூசை நாளில் யாழ் பல்கலைக்கழகத்தில் திருவாசக முற்றோதல்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை, இசைத்துறை, உயர் பட்டப் படிப்புக்கள் பீடம், சைவசித்தாந்த முதுமாணிக் கற்கை அணி- VII இணைந்து நடாத்தும் திருவாசக முற்றோதல் நிகழ்வு கடந்த ஆனித் திங்கள் 08ம் நாள் வெள்ளிக்கிழமை (23-06-2023) காலை 08 மணி தொடக்கம் பிற்பகல் 01 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரமேசுவரன் திருக்கோயில் இடம் பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர். செ.கண்ணதாசன், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன், பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர். நா.சண்முகலிங்கன், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துநாகரிகத் துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் ஆகியோர் சிறப்பு அழைப் பாளர்களாக கலந்து கொண்டிருந் தனர்.

சிறப்பு ஓதுவராக தமிழ் நாட்டிலிருந்து குமாரவயலூர் பாலச்சந்திரன் ஓதுவார் அவர்களும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் சில ஓதுவார்களும், தென்னாடு செந்தமிழாகம சிவமட குழுவினரும் மற்றும் பல அடியார்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு மணிவாசகப் பெருமானின் அருள்வாசகமான திருவாசகத்தை ஓதி திருவருள் பெற்றிருந்தனர்.

திருச்சிற்றம்பலம்

## திருக்கேதீச்சரத்தில் மாணவர்கள் ஒன்றுகூடி திருமுறை சேர்ந்திசை விண்ணப்பம்



**“திருமுறையே சைவநெறிக் கருவூலம்”** என்ற வரிகளை பறைசாற்றும் வகையில், இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், தமிழ்நாடு குமாரவயலூர் “திருமுறைக்கலாநிதி” முனைவர். சிவத்திரு. திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் (தேவார உதவிப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்) அவர்கள் தலைமையில் திருக்கேதீச்சரத்தில் திருமுறை சேர்ந்திசை விண்ணப்பம் நிகழ்வானது இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கடந்த வைகாசித் திங்கள் 17ம் நாள் (31-05-2023), திருக்கேதீச்சர பெருந்திருவிழாவில் எட்டாம் நாள் திருவிழாவான பத்தர் திருவிழா (பக்தோற்சவம்) எனும் அடியார்கள் பெருவிழாவன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இணையம் வழியான திருமுறை வகுப்பில் பண்ணிசை பயிலும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களும், அவர்கள் தம் மாணவர்களும், அடியார் பெருமக்களும் கலந்துகொண்டு எம்பெருமான் முன்பு திருமுறை சேர்ந்திசை விண்ணப்பம் செய்தனர்.

மேலும் திருக்கேதீச்சர பெருந்திருவிழாவில் எட்டாம் நாள் திருவிழாவான பத்தர் திருவிழாவனது (பக்தோற்சவம்) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினுடைய திருவிழாவாகும். ஆகையால் கேதீச்சரத்தானின் திருவருளால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்ளும் வாய்ப்பும் அமைந்திருந்தது.

திருச்சிற்றம்பலம்

# திருமணத் தடைகள் நீங்கி விரைவில் திருமணம் நடக்கப் பாடவேண்டிய திருவேதிகுடிப் பதிகம்



திருவேதிகுடி மாதேவர் - வேதபுரீசுவரர்

நீண்ட நாளாக திருமணமாகாமல், திருமணத் தடைகள், இடையூறுகள், இழுபறிகள் நிலவிவந்தால் தஞ்சாவூர் வேதிகுடியில் இருக்கும் மங்கையற்கரசி அம்பாளுடனுறை வேதிகுடி வேதபுரீசுவரப் பெருமானை மனதிலே நினைந்து உளமுருகி திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அருளிச்செய்த முன்றாம் திருமுறை (பதிகம் 3-78, திருவேதிகுடி) “நீறுவரி ஆடுஅரவொடு ஆமை மனவு” என்ற பதிகத்தினை, காலை மாலை இருவேளையும் வேதிகுடி அரசின் திருவடியை நீள நினைந்து, உளமுருகி மெய்யன் போடு பாடுவது திருமணத்தடைகளை தகர்க்கும். உரியவர் பாடினால் இன்னும் சிறப்பாகும் இப்படி இயலாதவர்களுக்கு அவர்கள் பொருட்டு பெற்றோரோ, உறவினர்களோ பாடுதலும் பலன்தரும்.

**இறைவன்:** வேதபுரீசுவரர் **இறைவி:** மங்கையர்க்கரசி
**பண் :** சாதாரி **இராகம்:** பந்துவராளி

(1) நீறுவரி ஆடுஅரவொடு ஆமை மனவு என்புநிரை பூண்பர் இடபம்
ஏறுவர் யாவரும் இறைஞ்சு கழல் ஆதியர் இருந்த இடமாம்
தாறுவிரி பூகம்மலி வாழை விரை நாற இணை வாளை மடுவில்
வேறுபிரியாது விளையாட வளம் ஆரும் வயல் வேதிகுடியே

(2) சொற்பிரிவு இலாதமறை பாடி நடம் ஆடுவர் தொல் ஆனை உரிவை
மற்புரி புயத்து இனிது மேவுவர் எந்நாளும் வளர் வானவர் தொழுத்
துற்புஅரிய நஞ்சு அமுதமாக முன்அயின்றவர் இயன்ற தொகுசீர்
வெற்புஅரையன் மங்கைஒரு பங்கர்நகர் என்பர்திரு வேதிகுடியே

(3) போழும்மதி பூண்அரவு கொன்றை மலர் துன்றுசடை வென்றி புகமேல்
வாழும்நதி தாழும் அருளாளர் இருள் ஆர்மிடறர் மாதர் இமையோர்
சூழும்இரவாளர் திருமார்பில் விரிநூலர் வரிதோலர் உடைமேல்
வேழஉரி போர்வையினர் மேவுபதி என்பர்திரு வேதிகுடியே

(4) காடர்கரி காலர்கனல் கையர் அனல் மெய்யர் உடல் செய்யர் செவியில்
தோடர் தெரி கீளர்சரி கோவணவர் ஆவணவர் தொல்லை நகர்தான்
பாடல் உடையார்கள் அடியார்கள் மலரோடு புனல் கொண்டு பணிவார்
வேடம் ஒளி ஆனபொடி பூசிஇசை மேவுதிரு வேதிகுடியே

(5) சொக்கர் துணை மிக்க எயில் உக்க அற முனிந்து தொழு மூவர் மகிழத்
தக்க அருள் பக்கம் உற வைத்த அரனார் இனிது தங்கும் நகர்தான்
கொக்கு அரவம் உற்ற பொழில் வெற்றி நிழல் பற்றி வரி வண்டு இசை குலாம்
மிக்க அமரர் மெச்சி இனிது அச்சம் இடர் போக நல்கு வேதிகுடியே

(6) செய்யதிரு மேனிமிசை வெண்பொடி அணிந்து கருமான் உரிவை போர்த்து
ஐயம் இடும் என்று மடமங்கை யொடு அகம் திரியும் அண்ணல் இடமாம்
வையம் விலை மாறிடினும் ஏறுபுகழ் மிக்கி இழிவு இலாதவகையார்
வெய்ய மொழி தண்புலவருக்கு உரை செயாத அவர் வேதிகுடியே

(7) உன்னி இரு போதும் அடி பேணும் அடியார் தம் இடர் ஒல்கு அருளித்
துன்னி ஒரு நால்வருடன் ஆல் நிழல் இருந்த துணைவன் தன் இடமாம்
கன்னிய ரொடு ஆடவர்கள் மாமணம் விரும்பி அரு மங்கலம் இக
மின்இயலும் நுண்இடை நல் மங்கையர் இயற்றுபதி வேதிகுடியே

(8) உரக்கரம் நெருப்பு எழ நெருக்கி வரை பற்றிய ஒருத்தன் முடிதோள்
அரக்கனை அடர்த்தவன் இசைக்கு இனிது நல்கி அருள் அங்கணன் இடம்
முருக்கு இதழ் மடக்கொடி மடந்தையரும் ஆடவரும் மொய்த்த கலவை
விரைக்குழல் மிகக் கமழ விண்ணி இசை உலாவுதிரு வேதிகுடியே

(9) பூவின்மிசை அந்தணனொடு ஆழிபொலி அங்கையனும் நேட எரியாய்த்
தேவுமிவர் அல்லர் இனி யாவர்என நின்று திகழ்கின்றவர் இடம்
பாவலர்கள் ஓசை இயல் கேள்விஅது ஆறாத கொடையாளர் பயில்வாம்
மேவு அரிய செல்வம்நெடு மாடம்வளர் வீதி நிகழ் வேதிகுடியே

(10) வஞ்சஅமணர் தேரர் மதிகேடர் தம்மனத்து அறிவிலாதவர் மொழி
தஞ்சம் என என்றும் உணராத அடியார் கருது சைவன் இடமாம்
அஞ்சுபுலன் வென்று அறுவகைப் பொருள் தெரிந்து எழுஇசைக் கிளவியால்
வெஞ்சினம் ஒழித்தவர்கள் மேவி நிகழ்கின்ற திருவேதிகுடியே

(11) கந்தம்மலி தண்பொழில் நல்மாடம் இடை காழி வளர் ஞானம் உணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி ஆதி கழலே
சிந்தைசெய வல்லவர்கள் நல்லவர்கள் என்ன நிகழ்வு எய்தி இயிமையோர்
அந்தஉலகு எய்தி அரசாளும் அதுவே சரதம் ஆணை நமதே - திருக்கடைக் காப்பு

**திருவேதிகுடி செல்லுங்கள் :**

திருமணத் தடைகள் நீங்கி இனிதே திருமணம் நடைபெற்றவர்கள் இயலுமாயின் திருவேதிகுடி சென்று வேதபுரீசுவரர் மற்றும் மங்கையர்க்கரசி அம்மனை வழிபட்டு வாழ்வாங்கு வாழ எல்லாம்வல்ல திருவருள் கைகூடட்டும்.

# யாழ்ப்பாணம் கொக்குவிலில் தென்னாடுடைய சிவனைப் போற்றி “தென்னாடு வீதி”




யாழ் கொக்குவில், கொக்குவில் கிழக்கு, குளங்கரை வீதியில், தென்னாடு செந்தமிழாகம சிவமடமானது ஐம்பூதநாதர் திருக்கோயிலோடு 2020ம் ஆண்டு நிறுவப்பட்டு, இன்று மூன்று ஆண்டுகளாக தன்னிலை மாறாது முனைப்போடு செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் தென்னாடு சிவமடமானது அமைந்துள்ள வீதியானது, இதுவரை காலம் “குளங்கரை வீதி” என்ற பெயரிலேயே, பயன்படுத்தப்பட்டு வந்தது.

முன்னைய குளங்கரை வீதியானது, தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் அவர்களின் திருவுளப்பாங்கின் அடிப்படையில் “தென்னாடு வீதி” என மாற்றப்பட்டுள்ளது. இச்செயற்பாடானது நல்லூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சிவத்திரு ப.மயூரன் அவர்களின் உதவியுடன், வீதிவாழ் மக்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடல்கொண்ட தென்னாட்டை ஆண்ட, எங்கள் தென்னாடுடைய சிவபெருமானை முன்னிலைப்படுத்தியே, இந்த “தென்னாடு” என்கின்ற பெயர் வீதிக்கு வைக்கப்பட்டுள்ளது. கொக்குவிலில் ஏற்கனவே மருத்துவக் கல்லூரி வீதி, ஆடியபாதம் வீதி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

# நயினாதீவு பெருந்திருவிழாவை சிறப்பிக்க தமிழ் நாட்டிலிருந்து ஓதுவார் வருகை



சிவபூமியாம் ஈழத்திருநாட்டின் வடக்கே எம் சைவத்தமிழை பறைசாற்றும் ஓர் அற்புதக்கோயிலே நயினாதீவு நாகபூசணி அம்மன் திருக்கோயிலாகும். இவ் நயினாதீவு நாகபூசணி அம்மன் திருக்கோயில் வருடாந்த பெருந்திருவிழாவானது, கடந்த ஆனித் திங்கள் 04ம் நாள் திங்கள்கிழமை (19-06-2023) அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு உள்ளது.

அந்தவகையில் இம்முறை திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக, நயினை அம்மையை தீந்தமிழ் திருமுறைகளால் குளிர்விக்க, தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் ஏற்பட்டில், தமிழ் நாட்டிலிருந்து “பண்ணிசைமணி” சிவத்திரு ச.மாணிக்கவாசகன் ஓதுவார்மூர்த்திகள் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். நயினாதீவு நாகபூசணி அம்மன் திருக்கோயில் பெருந்திருவிழாவில் தமிழ் நாடு ஓதுவாமூர்த்திகள் திருமுறை விண்ணப்பம் செய்வது இதுவே முதல் தடவையாக அமைகிறது.

சிவத்திரு ச.மாணிக்கவாசகன் ஓதுவார்மூர்த்திகள் அவர்கள், தில்லையில் உள்ள ஆலவாய் அண்ணல் தேவாரப் பாடசாலையில் பன்னிரு திருமுறைகளை முறையாக ஐந்தாண்டு காலம் பயின்று பின் அங்கு “பண்ணிசைமணி” என்னும் பட்டம் பெற்றாரவர் ஆவார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டம் (கர்நாடக சங்கீதம்) பயின்று தேர்ச்சியும் பெற்றுள்ளார். மேலும் தஞ்சை, திருநாகேசுவரம், திருவெண்ணெய் நல்லூர் போன்ற பல திருத்தலங்களில் திருமுறை பண்ணிசையினை நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு திருமுறை தேர்ச்சி பெற்றவர்கள் ஈழத்திருநாட்டிற்கு வருகை தரவேண்டும், அவர்களை தொடர்ந்து எம் ஈழத்திலும் திருமுறைத் தேர்ச்சியாளர்கள் உருவாக வேண்டும், திருமுறைகள் என்றும் நிலைக்க வேண்டும் என்ற முனைப்பே தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் நோக்காக அமைகின்றது. தென்னாட்டின் இச் சிவப்பணிகள் தொடரும்.

ஈழத்து ஓதுவார்களை வரவேற்க என்றும் தென்னாடு செந்தமிழாகம சிவமடம் தயாராக உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருச்சிற்றம்பலம்

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# இளைய அணியொன்று தேவை!

சைவ சமயம் அனாதியானது. அதன் விரிவும், சித்தாந்தமும், தனித்துவமான சிறப்பைக் கொண்டது. இதன் பெருமைகளை போற்றாத அறிஞர்கள் கிடையாது. மேலைத்தேசத்தவர்களும் சைவத்தைப் பின்பற்றி, ஒழுகுகின்றனர். நம் சமயத்தின் தொன்மைகளையும் சிறப்பையும், எதிர்வரும் தலைமுறையினர் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில், உரைப்பது காலத்தின் கட்டாயம். இன்று இளையவர்கள் அதிகம் தம் காலத்தை சமூக வலைதளங்களில் அவமே போக்குகின்றனர். கோயில்களை நோக்கிய அவர்களின் வருகை அருகிப் போய் விட்டது. எனவே சைவ சமய அமைப்புகள், சமூக வலைத்தளங்களை ஆரோக்கியமான வகையில் பயன்படுத்தி, இளையவர்களிடம் நம் சமயத்தை சேர்ப்பிப்பது காலத்திற்கு ஏற்ற பணியாகும். இவ்வாறே,

சைவ சமயக் கருத்துக்களை முன்வைத்து தர்க்கித்து வெல்லக்கூடிய இளையவர்களையும், சீர்வளர்சீர் ஆறுமுகநாவலர் அவர்களைப் போல் சொற்பொழிவு மரபைக் கைக்கொண்டு கோயில்கள் தோறும் சைவ சமய பேருரைகளை, தொடர் சொற்பொழிவுகளை ஆற்றக் கூடிய வளம் மிக்க இளையார்களை ஒரு சிவப்படையாக உருவாக்க வேண்டியதும் அவசியம்.

**“எட்டினோடு இரண்டும் அறியேனை**
**பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை”** என்கிறார் மணிவாசகப் பெருமான்,

**‘புத்தரோடமனை வாதில் அழிவிக்கும் அண்ணல்**
**திருநீறு செம்மை திடமே”** என்றும்,

**“ஓதியோத்தறியாவமணாதரை வாதில்**
**வென்றழிக்கத் திருவுள்ளமே”** என்றும் பாடுகின்றார் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

எம் தத்துவத்தை நிலை நிறுத்த வாதம் செய்வதும், ஊர் கூடும் இடத்தில் உரைகள் செய்வதும் காலம் காலமாக நடைபெற்று வருகின்ற ஒன்று. இன்று சமூக வலைத்தளங்களைத் திறந்தால், பிற சமயத்தவர் எங்கும் ஆக்கிரமித்ததைப் போல் எண்ணம் எழுகின்றது. அவர்களின் சமயப் பரப்புகை வீச்சு அதிக அளவில் உள்ளது. அது மட்டுமல்லாமல் வீதிகளில் நின்று ஒலிபெருக்கி போட்டு கூச்சலிடவும் தொடங்கி விட்டனர்.

நாமும் அங்கனம் செய்ய விளைய வேண்டும் என்பதல்ல, எங்கள் உயர்ந்த தத்துவ சைவ சமயத்தை குறைந்த பட்சம் விளங்கிக்கொண்டு, பிறருக்கு உரைசெய்யும் இளையவர்கள் அணி ஒன்றை உருவாக்க வேண்டும். காலமெல்லாம் வாழும் சமயத்திற்கு, உயிர்ப்புள்ள தொண்டர்கள் தேவையல்லவா?

ஒரு காலத்தில், பெண் பண்டிதைகளாலும் பேச்சாளர்களாலும், இந்த சமய நெறி பெரு வீச்சாக பரப்பப்பட்டது. ஆனால் இன்று, இலங்கையில், யாழ்ப்பாணத்தில் சமய சொற்பொழிவு செய்யும் ஆற்றல்மிக்க பெண் பேச்சாளர்கள் யாரேனும் உள்ளனரா? என்று, கேட்கும் அளவிற்கு நிலை உண்டு. இது சாதாரணமாக கடந்து செல்லத்தக்க செய்தி அல்ல! எம் எல்லோருக்குமான ஒரு எச்சரிக்கை அறிவிப்பு. எந்த தேசத்தில் ஒரு பெண் சித்தாந்த அறிவு பெற்று, அதைப் பிறருக்கு உரைக்கும் திறமோடு உள்ளாளோ, அந்தத் தேசமே வளமான எதிர்காலத்தை அடைந்து உய்யும். இன்று இந்த மண்ணில், பல்கலைக்கழக தலைமைப் பீடங்களை அலங்கரிக்கும் கல்விப்பணியை புரிகின்ற பேராசிரியைகளும், விரிவுரையாளர்களும் உள்ளனர். கல்லூரிகளிலே பெண் அதிபர்களும், ஆசிரியைகளும் அளவில் அதிமாகவே உள்ளனர். ஆனால் சமூகம் நோக்கிய அவர்கள் ஊடாடலும், ஒரு பொது மேடையிலேயோ, ஒரு கோயிலிலேயே எமது சைவ நெறியை உரைசெய்யும் ஆற்றலோடும், தெளிவோடும் எத்தனை பேர் உள்ளனர்? இந்தக் கேள்விக்கு விடை தேடுவதோடு, அங்ஙனம் ஆற்றல் படைத்த ஒரு இளம் பெண் சமுதாயத்தை உருவாக்க நாம் முனைப்போடு செயலாற்ற வேண்டும்.

சைவத்தமிழ் அருட்சொற்பொழிவாளர்கள், வகுப்புக்களை நடத்துவதோடு, ஞானத்தை ஊட்டும் அறிவு நூல்களை ஓதி உணரத்தக்க வகையில், மாணவர் அணி ஒன்றை தயார் படுத்தவேண்டும். இந்தப் பணியில் ‘தென்னாடு செந்தமிழாகம சிவமடம்’ முனைப்போடு செயற்படுகின்றது. இன்னும் இன்னும் இறைபணி நோக்கிய ஆர்வமுடையவர்களை எமக்கு அடையாளப்படுத்துமாறு, வாசகர்களை கேட்டு நிற்கின்றோம். இளைய சைவக் காவலர்களின் வருகைக்காக தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் கதவுகள் எப்போதும் அகலத் திறந்திருக்கும்!

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# காண்டல் - கருதல் - உரை

விஞ்ஞானம் என்பது ஆராய்ந்து பெறும் அறிவியல் என்று பொருள்படும். அது ஆராயும் வகைக்கேற்ப இயற்கை விஞ்ஞானம், இயற்கையில் விஞ்ஞானம் என்று வகைப்படும். விஞ்ஞான பூர்வமான கற்கைகளிலே ஆராய்ச்சி என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அவன், அவள், அது எனும் மூவகையுடைய உலகத் தொகுதி, தோன்றல், நிலைத்தல், அழிதல் என்ற மூவினைப்பட்டது என்பது சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபு. அந்த முடிவிற்குள் தன்னை உட்படுத்துவதற்காக சைவசித்தாந்தம் சில வகைப்பாடுகளின் அடிப்படையில் பதி, பசு, பாசம் என்ற முப்பொருட்களையும் ஆராய்கின்றது.

காண்டல்,கருதல்,உரை என்பன சைவசித்தாந்தம் பேசுகின்ற மூவகை அளவைகள் ஆகும். காண்டல் என்பது காட்சி எனப் பொருள்படும். பிரத்தியட்சம் எனவும் வடமொழியில் பொருள்படும். ஐம்புலன் வழி அறிந்து நுகரப்படும் அறிவின் பெயர் இதுவாகும். நடைமுறையில் உள்ள விஞ்ஞானக்கற்கை பெருமளவில் இம்முறையையே கையாளுகின்றது.

இரண்டு வகையான இரசாயனப் பதார்த்தங்களைச் சேர்க்கின்ற போது அதன் வருவிளைவை அறிந்து கொள்வதற்காக ஆய்வு கூடத்திலே அந்தப் பரிசோதனை செய்யப்படுகிறது. ஆய்வுப்பொருளினை ஆய்வாளர்கள் நேரடியாக ஆய்ந்து அதன் விளைவையும் அவர்கள் நேரடியாகப் பெறுகின்றார்கள். இதனைக் காண்டல் அளவை என்று சைவசித்தாந்தம் பேசுகின்றது.

சைவசித்தாந்தத்தின் இரண்டாம் வகை அளவை கருதல் அளவையாகும். புவியீர்ப்பு விசையைக் கண்டறிந்த நியூட்டன் அதை முதன் முதலில் கண்டறிய முனைந்த போது, அவர் அக்கோட்பாட்டை பரிசோதனைக் கூடத்தில் வைத்துப் பரிசோதித்து அறியவில்லை. ஒரு பொருள் விழுகின்ற போது, அப்பொருள் வேறெந்தத் திசையும் செல்லாது, நிலம் நோக்கி வருவதை ஏதுவாகக் கொண்டு கருதினார். அந்தக் கருதல் அளவையின் ஊடாகவே புவியீர்ப்பு விசைக் கோட்பாடு பிறந்தது. இன்னொரு விதத்தில் சொல்வது என்றால் இரண்டு இரசாயனப் பதார்த்தங்கள் சேரும் போது தோன்றும் விளைவை நேரடியாக காண்டல் மூலம் துணியாது, அதற்குரிய சமன்பாடுகளையிட்டு, அவற்றைத் தீர்ப்பதன் மூலமும் அறியலாம். இதுவும் கருதலின் பாற்பட்டதே. கருதலை அனுமானம் என்று வடமொழியில் சொல்வர்.

சைவசித்தாந்தம் கூறும் மூன்றாம் வகை அளவை உரையளவை ஆகும். நியூட்டனின் விதி, ஓமின் விதி என்று நாம் அறிந்த பெரும்பாலான விடயங்கள் ஏலவே ஒருவரால் உறுதி செய்யப்பட்டு, பதியப்பட்டு விட்டது. உதாரணமாக புவியீர்ப்பின் ஆர்முடுகல் 9.8 $m/s^2$ என்று ஏலவே துணியப்பட்ட விடயம். ஒவ்வொரு சமன்பாடுகளைச் செய்கின்ற போதும், புதிதாக புவியீர்ப்பின் ஆர்முடுகலை உறுதி செய்ய வேண்டிய தேவையில்லை. அது ஏற்கனவே ஒருவரினால் கூற்றாக்கப்பட்டமையால் அதை அப்படியே பிரதியிடலாம். இதைத் தான் உரையளவை என்று சித்தாந்தம் பேசும். ஆப்த வாக்கியம் என்று வடமொழியில் பெயர்.

இந்த மூன்று அளவைகளின் துணைகொண்டு இறைவனின் இருப்பு, உயிர்களின் இருப்பு, தளைகளின் இயல்பு என்பவற்றை சைவ சித்தாந்தம் துணிகின்றது. சாதாரண உலகியல் வாழ்க்கைக்கு கூட இம்மூன்று அளவைகளும் கட்டாயம் தேவை. அதிலும் தலைமைத்துவம் சார்ந்து இயங்குகின்ற போது இம்மூன்று அளவைகளையும் துணைக்கொண்டு ஆய்ந்தால், வாழ்வியல் வெற்றி பெறும். அன்றாடம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நன்கு ஆய்ந்து அது தொடர்பாக எடுக்கக் கூடிய தீர்மானங்களைக் கருதல் வேண்டும். அவ்வாறு கருதியவற்றை காண்டல் அளவையின் ஊடாக நடைமுறையில் சோதித்து, சரிவர இயங்கின், உரை அளவை மூலம் வருங்காலத்திற்கான வழிகாட்டலாகப் பேணல் வேண்டும்.

**திருச்சிற்றம்பலம்**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

**சிவபெருமானினை வீட்டில் வழிபடவேண்டும் என்றால், மிகப்பெரிய அளவில் பூசைகள் செய்துவர வேண்டுமா?**

**கற்றுக் கொள்வன வாயுள நாவுள**
**இட்டுக் கொள்வன பூவுள நீருள**
**கற்றைச் செஞ்சடையான் உளன் நாமுளோம்**
**எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே - அப்பர் பெருமான்**

**புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை**
**நண்ணறியாமல் நழுவுகின்றார்களே - திருமந்திரம்**

நாள்தோறும் எம்பெருமானுக்கு பூக்கள் வைத்து ஒரு குவளையில் நீரினையேனும் படைத்து வழிபட்டுவந்தாலே பெரும்சிவபூசையாக அமையும் என்பது அப்பர்பெருமான், திருமூலர்பெருமான் அருள்வாக்கு. அங்ஙனம் வழிபடுகின்றவர்களுக்கு நமன் முதலிய எவராலும் எத் தீமைகளும் நெருங்காது. வினைகள் ஒழியும். பொன்னும் மெய்ப் பொருளும் போகமும் திருவும் கைகூடும். **“சலம்பூவொடு தூபம் மறந்தறியேன், தமிழோடிசை பாடல் மறந்தறியேன்”** என்றார் அப்பர்பெருமான்.

**பத்தியாகிப் பணைத்த மெய் அன்பொடும்**
**நொச்சியாயினும் கரந்தையாயினும்**
**பச்சிலையிட்டுப் பரவும் தொண்டர்**
**கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும்**
**திருவிடை மருத! திரிபுராந்தக!**
**- திருவிடைமருதூர் மும்மணிக்கோவை**

சிவபெருமானை வழிபடப் பூக்கள் கிடைக்கவில்லையென்றாற்கூட, ஏதேனும் இலைகளினைக் கொண்டேனும் வழிபடமுடியும் என்பதும் அங்ஙனம் வழிபட்டால் பிறவாப் பேரின்ப வாழ்வினை அருளும் கருணையாளன் என்பதினையும் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை நமக்கு உணர்த்துகின்றது. நாள்தோறும் பூவோ, இலையோ வைத்து, நீர் படைத்து சிவபெருமானினை வழிபட்டாலே பெரும்பலனை நாம் பெறமுடியும் என்பது இவற்றால் உறுதியாகின்றது.

சிவபூசை மிக மிக எளிமையானது! பலனோ, எந்தத் தெய்வ வழிபாட்டினாலும் பெறமுடியாத உயர்ந்த பெரும்புண்ணியத்தினைத் தந்தருளுவது! ‘‘குற்றஞ் செய்யினும் குணம் எனக் கருதும் கொள்கை கண்டு நின் குரைகழல்அடைந்தேன்’’ என்பார் சுந்தரமூர்த்தி நாயனார் பெருமான். எந்தேனும் குற்றங்கள் நிகழ்ந்தாலும் அவற்றையெல்லாம் மன்னித்து சிவபூசையினை ஏற்று மகிழ்வதில் சிவபெருமான்போல் வேறொரு தெய்வம் இல்லை என்பது இதனால் பெறப்படும். எனவே, சைவத்தமிழர்களாகிய நாம் அனைவரும் இல்லத்தில் சிவபூசை செய்துவருதல் வேண்டும். ‘‘மானிடப் பிறவிதானும் வகுத்தது மனம், வாக்கு, காயம் ஆன் இடத்து ஐந்தும் ஆடும் அரன் பணிக்கா அன்றோ’’ என்றருளிச் செய்துள்ளார் அருணந்தி சிவாசாரியப் பெருமான்.

அரிதிலும் அரிதாகிய மானிடப்பிறவியினை எடுத்து, நல்லூழி னாலேயே வாய்க்கும் சைவசமயத்தினைச் சாரும் பயனினையும் பெற்றுவிட்டு, சிவபெருமானினை மறந்து உழல்வோமென்றால் அதுபோல் பெரும் சிவபாதகம் வேறொருன்றும் இல்லை! சிவபூசை உள்ள வீடே வீடாகும்! ஏனையவை சவக்காடு என்பதே பொருளாகும்!

**மந்திரங்களில் தலையாய மந்திரம் எது?**

**அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்**
**அஞ்செழுத்தே ஆதிபுரா ணம்அனைத்தும் - அஞ்செழுத்தே**
**ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம்**
**மோனந்த மாமுத்தி யும். - (உண்மை விளக்கம்)**

**“எம்பெருமான் அருளிய வேதாகமங்களும், திருவைந்தெழுத்தேயாகும். முதன்மைபெற்ற புராணங்களனைத்தும் திருவைந்தெழுத்தேயாகும். ஆனந்த நடனமும் தத்துவாதீதமாகிய மௌனமாயிருக்கும் பரமுத்தியும் திருவைந்தெழுத்தேயாகும்.”** என்று மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய உண்மை விளக்கம் நூல் உரைக்கின்றது.

**அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்**
**பொருள் நூல் தெரியப்புகின் - திருவருட்பயன் (மெய்கண்டசாத்திர நூல்)**

ஆகமங்கள், மறைநூல்கள், மற்றைய சமய சாத்திர நூல்கள் என்று சொல்லப்படும் எல்லா நூல்களின் பொருளும் திருவைந்தெழுத்தில் அடங்கும் என்பது உமாபதி சிவாசாரியப்பெருமான் அருளிய திருவருட்பயன் என்னும் மெய்கண்டசாத்திரத்தின் முடிவு. எனவே, மந்திரங்களில் தலையாயது திருவைந்தெழுத்து என்பதைத் தெளியலாம்.

**துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்**
**நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்**
**வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த, வந்த கூற்று**
**அஞ்சஉ தைத்தன அஞ்சு எழுத்துமே.**
**- திருஞானசம்பந்தர்பெருமான் தேவாரம்**

**“தூங்கும்பொழுதும், விழித்திருக்கும் பொழுதும், மனம் கசிந்து உருக நாள்தோறும் திருஜந்தெழுத்தை நினைத்துப் போற்றுங்கள். பல வழிகளில் திரிந்து செல்லும் தன்மையுடைய மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து ஒருமுகப்படுத்தி இறைவனையே நினைத்து அவன் திருவடிகளை வாழ்த்திப் போற்றிய மார்க்கண்டேயரின் உயிரை அவருக்கு விதிக்கப்பட்ட வாழ்நாள் இறுதியில் கவர வந்த கூற்றுவனை உதைத்து அழித்தன திருவைந்தெழுத்தே”** என்கின்றார் திருஞானசம்பந்தப்பெருமான்.


சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**“மரணம்கை வைத்துஉயிர் மாற்றிடும்போதும்**
**அரணம்கை கூட்டுவது அஞ்சுஎழுத்து ஆமே”**
**- திருமந்திரம்**

மரணத்தின்போது உடலைவிட்டுப் பிரிந்துசெல்லும் நம் உயிருக்குப் பாதுகாப்பாக உடன்வந்து நிற்பது திருவைந்தெழுத்தேயாகும் என்று திருமூலர்பெருமான் அருளுகின்றார்.

**“எழுத்தை அழுத்தும் எழுத்து”** என்று திருமூலர்பெருமான், திருவைந்தெழுத்து பிரம்மன் எழுதிய தலையெழுத்தென்னும் ஊழ்வினையை அடக்கிவிடும் என்கின்றார். திருவைந்தெழுத்தினை ஓதுவோருக்கு ஊழ்வினை ஊறுசெய்யாதென்பதை **“ அஞ்செழுத்து அருளினாலே வந்தவாறு உரை செய்வாரை வாதியா பேதியாவே”** என்று மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய சிவப்பிரகாசம் நூலும் உரைத்தருள்கின்றது,

திருஞானசம்பந்தப்பெருமான் முதலிய நாயன்மார்கள், சந்தானகுரவர்களைக் காட்டிலும் நமக்கு வேறேதும் வழிகாட்டுதல் தேவைதானோ? திருவைந்தெழுத்து ஒன்றே எக்காலமும் நாம் ஓதிக்கொண்டிருக்கவேண்டிய மந்திரம் என்பதும், அம்மந்திரமே உயிர்கள் உடலைவிட்டுப் பிரிந்த சமயத்தில் உடன் நின்று உதவுவது என்பதும் இதனால் நன்கே பெறப்படும். சிவாசாரியர் முதல் பொதுச் சைவர் வரை இவ்வுண்மைகளை நன்குணர்ந்து திருவைந்தெழுத்தினைத் தம்கவசமாய்க் கொண்டு வாழ்தலே சைவப்பிறவியின் கடனாகும்.

**தாவர உணவு உண்பவர் மட்டுமே திருவைந்தெழுத்து ஓதுதல் வேண்டும் என்னும் நியதி ஏதும் உண்டா?**

வலிமையுடைய ஒருவனும் வலிமையற்ற ஒருவனும் ஒரு கல்லினை ஆகாயத்தினை நோக்கி எறிந்தால் இரண்டுபேரினதும் கல்லுகள் எப்படியேனும் பூமியை வந்து அடைவது உறுதி. அதுபோல், நியமங்களோடு வாழ்ந்து ஓதுவாராயினும், நியமங்களை முறைப்படி ஒழுகும் பக்குவம் அற்றோராயினும் திருவைந்தெழுத்தினை பத்தியோடு ஓதுவோர்கள் நிச்சயம் பலனை அடைவார்கள். பட்டினத்துப்பிள்ளையார் அருளிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவை இவ்வுண்மையைத் தெளிவுபட உரைத்தருள்கின்றது.

**“தூசின் நல்லன தொடையிற் சேர்த்தியும்**
**ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்தும்**
**மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி**
**இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை**
**மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது**

**சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த**
**முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்**
**நின்னது பெருமை அன்றோ என்னெனின்**
**வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்**
**மாட்டா ஒருவன் வாளா எறியினும்**


**நிலத்தின் வழாஅக் கல்லேபோல்**
**நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே”**
**- 11ம் திருமுறை (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை)**

**“ஐம்புலன்களும் நிறைவுபெறும்படி மனைவி, மக்கள், சுற்றத்தார் மகிழவும் இங்கு வாழ்கின்றோம். எனினும் மந்திரமாகிய திருவைந்தெழுத்தினை வாயினில் மறவாது ஓதி மனதினை உன் நினைவில் செலுத்துவதால், அதன் பலனாகிய முத்தியையும் இழக்கவில்லை. முதல்வனே, அத்தகு வல்லமை நின் பெருமையால் அல்லவா வந்தது. அது எங்ஙனம் எனில், வல்லான் ஒருவன் முயற்சிசெய்து எறிந்தாலும் வல்லமை அற்றவன் இயல்பாக எறிந்தாலும் நிலத்தில் விழும் கல்லைப்போல் நின் திருப்பெயரினைக் கூறுவோர் நலத்தினின்று வழுவார். நனி நலமே பெறுவர்.”** என்பது பட்டினத்துப் பிள்ளையாரின் அருள்வாக்கு. இதனால், சிவபெருமான்பால் அன்புகொண்டுள்ள அனைவருக்கும் திருவைந்தெழுத்து பயன் தரும் என்பது திடமான முடிவாகும்.

வலிமையுடைய ஒருவன் வீசிய கல் அதிக தூரத்திலும் வலிமையற்றவன் வீசிய கல் குறைந்த தூரத்திலும் விழுவதுபோல், நியமங்களோடு ஓதுவோர் பூரணபலனைப் பெற்றுய்வர் என்பதும் இதனால் நாம் உய்த்தறிய வேண்டியதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**இந்தப்பிறவியில் நாம் அனுபவிப்பவைகள் முப்பிறவிகளில் நாம் செய்த கன்மத்தின் பலனால் வந்தது என்றால், மனித முயற்சிக்கு இடமில்லை என்றாகிறதல்லவா?**

வாழ்வியல் நிகழ்வுகள் கன்னத்தில் அடிப்படையில் நிகழ்வது உண்மை எனினும், மனித முயற்சிக்கும் இடமுண்டு. அதற்கேற்ற பலன் கிடைக்கிறது. இதனை பின்வரும் உதாரண மூலம் விளக்கலாம்.

சீட்டாட்டத்தில் ஒருவனுக்கு குறிப்பிட்ட சில சீட்டுக்கள் கிடைக்கின்றன. அது அவனின் முயற்சிக்கு அப்பாற்பட்டது. அந்த சீட்டுக்களைப் பொறுத்தே ஆட்டத்தில் வெற்றி தோல்வியும் ஓரளவு அமைகின்றன. அது அவனின் வினைப் பயன் எனலாம், ஆனால் கிடைத்த சீட்டுக்களை வைத்து எப்படி ஆடி வெற்றி பெற வேண்டும் என்பது அவனின் முயற்சியை பொறுத்தது. அவனின் முயற்சிக்கு ஏற்ற பலனை அவன் பெறுவான்.

கன்மத்துக்கும் மனித முயற்சிக்குமான தொடர்பை இன்னொரு உதாரணம் மூலமும் விளக்கலாம். ஒரு மரத்தில் கட்டப்பட்ட ஒரு பசுவுக்கு வெளியில் சென்று உணவுப் பெறும் சுதந்திரம் இல்லை. இது அதன் கன்மப்பலன் என்று கூறலாம். ஆனால் அதனை கட்டியுள்ள வயிற்றின் நீளத்துக்கு அமைய அது நடந்து செல்லும் வசதியுண்டு. அக்கயிற்றின் நீளத்தை ஆரமாகக் கொண்ட வட்டத்துக்குள் திரிந்து அது புல்மேய்ந்து உண்ணலாம். இது அதன் முயற்சியால் ஆவது.

ஆகவே ஊழ் வலிதாயினும் மனித முயற்சிக்கும் இடமுண்டு என்பதும், அதற்கேற்ற பலன் கிடைக்கும் என்பதும்பெறப்படும். இதனாலேயே 'ஊழிற் பெருவலி யாவுள' என்று கூறிய திருவள்ளுவர் 'முயற்சி திருவினையாக்கும்' என்றும் கூறினார்.

**புண்ணியங்கள் பல செய்து எமது தீவினை பலனான பாவத்தை போக்க முடியாதா?**

நல்வினைப்பலன் புண்ணியம் என்றும் தீவினைப்பலன் பாவம் என்றும் கூறப்படும். இந்த இரண்டு பலன்களையும் நாம் அனுபவித்தே தீர்க்க வேண்டும். அதுவரை அவை எம்மை கட்டுப்படுத்துகின்றன. தீவினை பலனை இரும்பு விலங்குக்கும் (சங்கிலிக்கும்) நல்வினை பலனை பொன்விலங்குக்கும் ஒப்பிடுதல் உண்டு. ஒன்றை இன்னொன்றினால் போக்க முடியாது.

நல்வினை செய்பவன் பொதுவாக "நான் செய்கிறேன் எனது புண்ணியச் செயல்" என்று தச்செருக்குடன் செய்கிறான். இதுவும் தீவினை செய்தல் போல் ஆணவச்சேர்க்கையால் வந்ததே. இதனாற்றான் இது பொன்விலங்குக்கு ஒப்பிடப்படுகிறது.

**கடவுள் அல்லது குருவின் அருளால் கன்மத்தை வெல்ல முடியாதா?**

தான் செய்ததைத் தானே அனுபவிக்க வேண்டுமென்ற நியதி எல்லோருக்கும் பொது வான ஒன்று. ஆயினும், ஆன்மீக வளர்ச்சியுற்ற ஞானிகள் வாழ்வில் இந்த நியதிக்கு விதி விலக்கான சந்தர்ப்பங்களையும் காணமுடி கிறது. மாணிக்கவாசக சுவாமிகள் போன்ற வர்களின் வாழ்வுப்பாதை இறையருளால் மாற்ற மடைந்துள்ளது. சிவ ஞானிகளான நாயன்மார்கள் பல அற்புதங்கள் செய்து கன்மத்தை மாற்றியுள்ளார். அண்மைக் காலத்தில் இரமண முனிவர், சிவயோக சுவாமிகள் போன்ற சிலர் இறையருளின் துணையுடன் பலரின் நோய் பிணி தீர்த்தும் இடர்கள் கற்றியும் அற்புதங்கள் செய்துள்ளனர். ஆயினும் இறுதிக் காலத்தில் வந்த இவர்களின் நோயை இவர்களாலே மாற்ற முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஞானிகள் கூட தமது கன்மத்தை தாமே அனுப விக்க வேண்டும் என்பதை இது உணர்த்துவதாக உள்ளது.

**உயிர்கள் இடைவிடாது செயல் புரிந்து கொண்டே இருக்கின்றன. இங்ஙனமாக, உயிரின் முன்வினை அனுபவத்திற்கு வருவதும், புதிய வினை உண்டாவதும் இடைவிடாது நடைபெறுகிறதென்றே கொள்ளவேண்டுமல்லவா?**

வினைப் பயன் அனுபவமாதற்கு புதிய வினை அல்லது முயற்சி தேவைப்படுகிறது. இந்தப் புதிய வினை மூலம் முன் செய்த வினை இன்ப துன்ப அனுபவமாகி அழிகிறது. ஆனால் புதிய வினைக்குரிய பலன்கள் உருவாகி, அவையும் அனுபவத்திற்கு வருகின்றன. இங்ஙனம் ஒரு வினை அனுபவத்திற்கு வந்து அழியும் போது, அதிலிருந்து புதிய வினைகள் தோன்றுகின்றன. இங்ஙனம் வினையின் அழிவும் தோற்றமும் (நாசமும் உற்பத்தியும்) தொடர்ந்து வருவதால் வினையின் இந்தத் தன்மை நாசோற்பதி என்று கூறப்படும்.

ஆற்றிலே ஒரு இடத்திலுள்ள நீர் ஓடிப்போக, அந்த இடத்துக்குப் புதிய நீர் வருவதும், அதுவும் ஓடிப்போக மீண்டும் புதிய நீர் வருவதுமாக நீரோட்டம் இடைவிடாமல் நடைபெறுகின்றது. ஆயினும் அந்த இடத்தில் ஆறு நிலைத்திருப்பது போல் தோன்றுகின்றது. வினையின் தன்மையும் இவ்வாறு இருத்தலால் அது பிரவாக நிமித்தம் எனப்படுகிறது.

**வினைப்பலன் தீர்வதற்கு புதிய பிறவியும், அதனால் புதிய வினைப்பலனும் என்று வினையும் பிறவியும் ஒன்றன் பின் ஒன்றாக நீண்டு கொண்டே வருகின்றன. இதற்கு ஒரு முடிவில்லையா?**

வினைப்பலன் அனுபவத்திற்கு வந்து தீர்வதற்கு பிறவி எடுக்க வேண்டியுள்ளது. எடுத்த பிறவியில் செய்யும் வினையின் பலனை அனுபவிப்பதற்கு இன்னொரு பிறவி தேவைப்படுகிறது. இங்ஙனம் வினையினால் பிறவி, பிறவியால் வினை என்று வினையும் பிறவியும் சங்கிலித் தொடர்போல் நீள்கின்றன. ஆயினும் நாம் செய்யும் வினையால் அனுபவமும், அனுபவத்தினால் அறிவு வளர்ச்சியும் பெறுகி றோம். அறிவு வளர வளர உயிரைப் பற்றிய ஆணவத்தின் பிடி சிறிது சிறிதாக நீங்குகிறது. ஆணவப்பிடி நீங்கியதும் இறையருளுக்குப் பாத்திரமாகிறோம். அப்பொழுது எமது செயல் கள் ஆணவத்தினால் உந்தப் படாமல் இறை யருளால் உந்தப்படுகின்றன. ஆணவச் சேர்க்கை யற்ற இச் செயல்களின் பலன்கள் எம்மைத் தொடர்வதில்லை. இதனால் இறப்பு பிறப்பு என்னும் சுழற்சியிலிருந்து விடுபடுகிறோம்.

**மாயை**

**மாயை என்பது என்ன?**

உலகப் பொருட்களுக்கு மூலமாக இருக்கும் ஒரு நுண்பொருள் மாயை. எமது உடம்பு, அதன் உறுப்புக்கள், அதனுள்ளிருக்கும் மனம் முதலிய கருவிகள், நாம் காணும் உலகப் பொருட் கள், பிரபஞ்சத்திலுள்ள உலகங்கள் அனைத்தும் மாயையிலிருந்தே தோன்றுகின்றன.

**மாயை என்பது பொய்த் தோற்றமல்லவா?**

மாயை என்பது பொய்த் தோற்றமல்ல. இந்திய தத்துவங்கள் சில அதனைப் பொய்த் தோற்றம் என்று கூறுகின்றன. சைவசித்தாந்தம் சறும் மாயை அப்படியல்ல. இறைவன், உயிர் போன்று மாயையும் என்றுமுள்ள ஒன்றே.

**திருச்சிற்றம்பலம்**

மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை
(கலாநிதி க.கனேசலிங்கம்)

# யாழ்ப்பாணம் கரணவாய்-வரணி ஆதீனம் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு பார்வை

யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் என்னும் திருப்பெயரில் அமைந்துள்ள ஆதீனம் தோன்றுவ தற்கான சூழ்நிலையும், தோற்றுவித்தோரும், அவர் வரலாறும், ஆதீனம் தோன்றிய காலமும், அதன் வளர்ச்சி நிலையும் இவ்வியலில் ஆராயப்பெறுகின்றன.

### போர்த்துகீசியர் கொடுமையும் யாழ்ப்பாணம் தந்த நன்மணியும்

16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்து கீசியர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ மக்களுக்கு இழைத்த கொடுமைகளைச் சகிக்க முடியாமல், வரணியில் வாழ்ந்த தில்லைநாதத் தம்பிரான் என்பவர் பருத்தித்துறையில் பாய்மரக் கப்பல் ஏறி கோடிக்கரை வந்தடைந்து, திருமறைக்காடு திருமறைக்காடர் கோயிலின் அருகில் வாழ்ந்தார். இறை பத்தியுடன் மருத்துவம், யோகம், சித்து ஆகியவற்றில் தேர்ந்தவராக விளங்கினார்.

### அருள் அரசும் மன்னனின் மாண்பும்

தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகளின் இறைபத்தியும், மருத்துவ மேன்மையும், சித்துக்களின் சிறப்பும் இவரைப் பேரருளாளர் என்று புலப்படுத்தியது. அப்போது தஞ்சையை ஆண்ட மன்னன் தலயாத்திரை மேற்கொண்டு திருமறைக்காடரை வழிபட்டான். அந்தவேளை சுவாமிகளின் பத்தி நெறியையும், அவரது சிறப்பையும் அறிந்து 18 கிராமங்களையும் அவற்றில் உள்ளடக்கிய 2500 ஏக்கர் நிலத்தையும் மானியமாக்கி இவ்வாலயத்தைத்தன்சார்பில்கவனித்துக்கொள்ளுமாறு ஒப்படைத்தான்.தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் யாழ்ப்பாணம் கரணவாய், வரணி ஆதீனத்தை நிறுவித்திறம்படப் அருளாட்சி செய்து வந்தார்கள். இவர்கள் காலம் சைவசமய வளர்ச்சியின் தொடக்கக் காலம் என்பது அறியலாகின்றது.

### ஆதீனம் பெயர்க்காரணம்

இலங்கை நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாண மாவட் டத்தில் கரணவாய், வரணி என்ற இரு கிராமங்களில் உள்ள குருமார்கள் குடும்பத்தினர்களிடம் இந்நிர்வா கத்தை ஒப்படைத்ததால் யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் என்று பெயர்பெற்றது. தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் உடல்நிலை இயலாத காரணத் தால் மன்னனிடம் தாங்கள் அளித்ததை நிர்வாகத்தை எடுத்துக்கொள்ளும்படி வேண்ட, மன்னன் கொடுத் ததை திரும்பப்பெறுவது மன்னர் மரபன்று என்று கூறி நீங்களே தகுந்த ஒருவரை நியமித்துவிடுங்கள் என்று கூறினார்கள். அதன்படி தனது குருமார்கள் குடும்பத்தினரிடம் ஒப்படைத்தார் தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள். அதனால் இப்பெயர்பெற்று ஆதீனம் குருக்கள் பரம்பரைக்கு வந்தது என்பது அறியமுடிகின்றது.

### சித்தியடைதல்

தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் 80 ஆண்டுகள் ஆதீனத்தையும், திருமறைக்காடர் திருக்கோயிலையும் செம்மையாக செயல்படுத்தித் தனக்குப் பின் இவ்வாதீனத்தை முறையாக நடத்த தனது குருமார் களிடம் ஒப்படைக்க எண்ணி, குருமார்கள் குடும்பத்தாரிடம் ஒப்படைத்து நீங்கள் இதனைப் மேற்பார்வை செய்து வரவேண்டும் என்று கையளித்தார்.

அதன்பின் அந்த குருமார்கள் குடும்பங்கள், இருபத்தைந்தும் ஒன்றாக இணைந்து தங்களுக்குள் ஒருவரைக் காலத்திற்குக் காலம் நியமித்து (ஐந்து ஆண்டுக்கு ஒருவராக) மேற்பார்வை செய்வேண்டும் என வரையறுத்து அதன்படி செயல்பட்டு வரு கின்றனர். இதன் இடையில் தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் தமது 100 வயது கடந்த நிலையில் இறைவன் அருளுடன் சித்தியடைந்தார்கள் என்பது கர்ணபரம்ப ரைச் செய்தியாக உள்ளது. அன்று முதல் இவ்வாதீனம் செம்மையாகச் செயல்பட்டு வருகின்றது. இவ்வா தீனத்தில் குருபூசை விழாக்கள் சிறப்பாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகின்றது.

### வரலாற்று மூலங்கள்

இவ்வாதீனம் பற்றிய செய்திகள் இன்றுவரை புத்தக வடிவில் வெளிவரவில்லை. இவை கர்ணபரம்பரை செய்தியாகவே இருந்து வந்திருக்கின்றன. தில்லைநாதத் தம்பிரான் சுவாமிகள் காலத்தில் காணி உறுதி ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. அதன் பிறகு 1913-ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனத்தாருக்கும், இந்தியாவைச் சேர்ந்த தஞ்சை மாவட்டம் வடபாதிமங்கலம் சாமியப்ப முதலியா



ருக்கும், தஞ்சைத் துணை ஆணையர் அலுவலகத்தில் 3-06-1913 இல் வழக்கு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடந்து இறுதியில் இலண்டனில் இருந்து வந்த நீதியரசர் திரு. இராமநாதன் துரை அவர்கள் தலைமை யில் இலங்கையை சார்ந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் வழக்கறிஞர் அவர்கள் வாதாடி ஏ.எஸ். 121, 122/1919 இல் யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனத்திற்குச் சார்பாக உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதன்பின் 1956-இல் சென்னை உயர்நீதி மன்றத்தில் அசல் வழக்கு எண் 8/1956 உத்தரவும் (5 பக்கங்கள்) உள்ளன. மேலும் நடைமுறை மாற்றம் ஓ.எ. 60/1960 (நீதிபதி திரு. சோமசுந்தரதேசிகர் அவர்கள் போட்ட உத்தரவு) என்ற மாற்றியமைக்கப்பட திட்டமும், தற்போதைய நடைமுறைத் திட்டம் 71/72 என்பதும் நடைமுறையில் இருந்து வருகின்றன. இது தஞ்சை இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் கீழ்ச் செயல்பட்டு வருகின்றது. இவ்வாதீனத்தின் திருக்கோயில் முதன்மைத் தரத்தர திருக்கோயில்களில் ஒன்று என்பது குறிப்பி டத்தக்கது. இது தவிர ஏனைய இவ்வாதீனத்தின் சந்நிதானங்களின் உத்தியோகபூர்வ நியமனம் தொடர்பான ஆவணங்கள், மேலும் ஆலயங்களின் கல்வெட்டும், திருக்குடநீராட்டு கல்வெட்டின் மூலமும் அறியமுடிகின்றது.

இவ்வாதீனத்தின் 21-வது பட்டம் குருமுதல்வரிடம் நேரில் சென்று வணங்கி அவர்கள் வாய்மொழியாகச் சொல்லிய செய்திகள் (பேட்டி), இவ்வாதீனத்தின் தலைமை (பிரதான) குரு அவர்கள் சொல்லிய செய்திகள் (பேட்டி), திருக்கோயில் தலைமை நிர்வாக அதிகாரி (இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை) அவர்கள் பேட்டி, இவைமூலம் அறியப்பட்டுள்ளன. மேலும் இவ்வூர்ப் பெயரியவர்கள் நேரடிப் பேட்டியும், கர்ண பரம்பரைச் செய்திகளும் உள்ளன.

### ஆதீன வளர்ச்சியும் வரலாறும்

இவ்வாதீனம் தனது நேரடிக் கண்காணிப்பில் உள்ள 3000 வேலி நிலங்களையும், 27 கோயில்கள் மற்றும் இதர கோயிலையும் செம்மையாகக் காலங்கால மாகப் மேற்பார்வை செய்தும், கோயில்கள் குடநீராட்டுச் செய்தும், திருவிழா நடத்தியும் வருகின்றது. மேலும் ஆகமப் பாடசாலையும், தேவாரப் பாடசாலையும் நடத்தி வந்தது. மேலும் ஆதீனத்தில் மடங்கள், கட்டளைகள் தோற்றுவித்தும் அதன்மூலம் சமயப் பணிகள்செய்து வருகின்றது. கைலாசநாத அன்னசத்திரம், கரியாப்பட்டினம் வேதாமிர்தக்கரை அன்னசத்திரம் என்பன சத்திரங்களாகும்.

### ஆதீனத்தார்கள் மடங்களைத் தோற்றுவித்தல்

இவ்வாதீனத்தார்கள் தமக்கு இங்கு கைவழக்கச் செலவு செய்வதற்கு கோயில் பணத்தை எடுப்பது முறையன்று என்பதால் அவர்கள் தங்களது சொந்த நாடாகிய இலங்கையில் உள்ள சொத்தை விற்று அதிலிருந்து கிடைத்த தொகையைக் கொண்டு இந்தியாவில் நிலங்களை வாங்கித் தங்களது பெயரில் பதிவுசெய்து, அதன்பிறகு ஒரு மடத்தை நிறுவி, அதில் சில தருமங்கள் செய்தது போக மீதமுள்ள தொகை அவர்கள் சொந்த செலவுக்கு எடுப்பது தான் முறை என்று கருதினர். திருமறைக்காட்டில் இரண்டு பிரிவினர் அதாவது ஆண்வாரிசு, பெண்வாரிசு இருவரும், தனித் தனியே மடங்களை முறையே மாணிக்கவாசகர் மடம் மற்றும் ஆதிவாரமடம் என்றும் பெயர்கள் ஏற்படுத்தி இன்றும் செம்மையாகச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

### மாணிக்கவாசகர் மடம்

இம்மடம் திருமறைக்காட்டில் (வேதவனம்) மேலவீதியில் பெரிய கட்டிடத்தில் உள்ளது. இதுதவிர மனைப்பகுதியும், நன்செய், புன்செய் நிலங்களும் உள்ளன. கரியாப் பட்டினத்தில் 5 வேலி நிலம் உள்ளது. இதன் கட்டளை மறைக்காடருக்கு, இரவுத் திருமஞ்சன மும், ஏறுபடியும் செய்து வருகின்றது. இங்கு மாணிக்க வாசகர் குருபூசையும் சிறப்பாக கொண்டாடப்படு கின்றது. மேலும் மறைக்காடருக்கு சுக்கிரவார நான்மைப் பிறைநாள் திருமஞ்சன ஆராதனையும், அதிதிகளுக்குத் தங்குமிடம் முதலியன அளித்து உதவுதல் இதன் பணியாகும். இந்தச் செலவுகள் போக மீதமுள்ள தொகை தங்களது சொந்த செலவுகளுக்கு எடுத்துக் கொள்ளவேண்டியது. நிர்வாகம் இன்றுவரை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இம்முறையும் (2023) மாணிக்கவாசக சுவாமிகள் மடத்தில் மாணிக்கவாசகர் திரு உருவப் படம் வைக்கப்பட்டு, வண்ண மலர்களால் அலங்கரிக் கப்பட்டு சிறப்புத் தீபாராதனை நடந்தது. இதில் யாழ்ப்பாணம் கரணவாய் வரணி ஆதீனம் மற்றும் மாணிக்கவாசக மடத்தின் தர்மகர்த்தா செவ்வந்திநாத பண்டார சன்னதி மற்றும் ஆதிவார மடம் நிர்வாகி குமரேசமூர்த்தி அவர்களுடன் கல்லூரி பேராசிரியர்கள், பத்தர்கள் கலந்து கொண்டனர்.

### மாணிக்கவாசகர் மடத்தின் நிர்வாகிகள்

இம்மடம் தோன்றி 108 ஆண்டுகள் ஆகின்றன. இம் மடம் ஆண் வாரிசுகளினால் பேணிப் பாதுகாக் கப்பட்டு வருகிறது.

1. சீர்வளர்சீர் கைலாசநாத பண்டார சந்நிதி - தோற்றுவித்தவர் - 1885
2. சீர்வளர்சீர் விசுவநாத பண்டார சந்நிதி - 13 ஆண்டுகள்
3. சீர்வளர்சீர் கந்தையா பண்டார சந்நிதி
4. சீர்வளர்சீர் கதிர்காம பண்டார சந்நிதி
5. சீர்வளர்சீர் நமசிவாய பண்டார சந்நிதி
6. சீர்வளர்சீர் சாமிநாத பண்டார சந்நிதி
7. சீர்வளர்சீர் விசுவநாத பண்டார சந்நிதி
8. சீர்வளர்சீர் குமாரசாமி பண்டார சந்நிதி
9. சீர்வளர்சீர் சுப்பிரமணிய பண்டார சந்நிதி

### ஆதிவார மடம்

இம்மடம் திருமறைக்காட்டில் (வேதவனம் / வேதா ரணியம்) ஏரி கீழ்க்கரையில் இயங்கி வருகிறது. இம்மடத்திற்கு 100 1/2 வேலி நிலமும் (நன்செய், புன்செய்) மனைப்பகுதிகள் ஆக ஒரு வேலியும் இருக்கின்றன. மடத்தின் கட்டிடங்கள் நாளடைவில் பழுதடைந்து இடர்ப் பாடுகளுடன் காணப்படுகின்றது. தற்போதைய மடத்தின் 20 வது சந்நிதானம் அவர்கள் புதிய கட்டிடங்கள், கட்ட அடிக்கல் நாட்டுவிழாச் செய்தும், செப்பனிட்டும் வருகிறார்கள். மேலும் இம்மடத்தின் சார்பில் வேதவனநாத சுவாமி கோயிலில் எழுந்தருளி இருக்கும் வரசித்தி விநாயகருக்குத் தைப்பூசத் திருநாளில் சிறப்புத் திருமஞ்சனம், வழிபாடும் மற்றும் அன்னதானமும் நடைபெறுகின்றது. இது அம்மடத்தினர் செய்யவேண்டிய தருமமாகும். மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் பசித்துவரும் ஏழைகளுக்கும் அன்னம் அளித்தலும் இதன் கடமையாகும். இந்த மடம் தோன்றி 119 ஆண்டுகள் ஆகின்றன.

### ஆதிவார மடத்தின் நிர்வாகிகள்

இம்மடம் பெண் வாரிசுகளின் நலன் கருதி ஏற்படுத்தப்பட்டது.

1. சீர்வளர்சீர் கந்தப்ப பண்டார சந்நிதிகள் - தோற்றுவித்தவர். தோற்றுவித்த ஆண்டு ஆடி மாதம் 20 ஆம் தேதி 1872-ஆம் ஆண்டு.
2. சீர்வளர்சீர் செவந்திநாத பண்டார சந்நிதி
3. சீர்மதி சுந்தரவள்ளி அம்மாள்
4. சீர்வளர்சீர் சட்டநாத பண்டார சந்நிதி
5. சீர்வளர்சீர் சோமசுந்தர பண்டார சந்நிதி
6. சீர்வளர்சீர் கனகசபை பண்டார சந்நிதி
7. சீர்வளர்சீர் சோமசுந்தர பண்டார சந்நிதி
8. சீர்வளர்சீர் குமரேசமூர்த்தி பண்டார சந்நிதி (12-2-86 முதல் தற்போது நிர்வாகத்தில் உள்ளார்கள்)

**வரணி ஆதீன வரலாறு தொடரும்...**

திருச்சிற்றம்பலம்

மூலம் - சைவ ஆதீனங்கள், ஊரன் அடிகள்

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவும், ஐம்பூதநாதர் திருக்கோயில் சங்குநீராட்டும்

(சென்ற திங்கள் இதழ் தொடர்ச்சி)

## 2023ம் ஆண்டிற்கான தென்னாட்டு நிகழ்வுகள்

### தைத் திங்கள் - 2023

*(01-01-2023)* - சாவகச்சேரி வாரிவனேசுவரர் திருக்கோயிலின் இரண்டாம் ஆண்டு நிறைவு சங்கு நீராட்டு நிகழ்வானது இடம்பெற்றது.

*(01-01-2023)* - யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெற்றது.

*(06-01-2023)* - திருவாதிரை திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்று, ஆதிரை அருட்காட்சி வழிபாடுகளுடன் எம்பெருமான் திருவீதிஉலாவும் சிறப்பாக இடம்பெற்றது.

*(06-01-2023)* - மார்கழித் திங்கள் நிறைமதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

*(15-01-2023)* - தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் தைப் பொங்கல் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது.

*(17-01-2023)* - கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பகுதியில், முழங்காவில் மகா வித்தியாலயத்தில் அமையப்பெற்ற ஓங்கார நாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டானது சிறப்பாக நடந்தேறியது. இந்நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், ஓதுவார் நவரத்தினம் ஐயா, ஓதுவார் முருகானந்தம் ஐயா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

*(19-01-2023)* - தைத் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடு இடம்பெற்று அதனைத் தொடர்ந்து, 28வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடு இடம்பெற்றது.

*(29-01-2023)* - முழங்காவில் ஓங்காரநாதர் திருக்கோயில் சங்கு நீராட்டு இடம்பெற்றது.

### மாசித் திங்கள் - 2023

*(01-02-2023)* - சிவத்திரு. பத்மநேசன் சிவநேசராணி அவர்களின் புதுமனை புகுவிழா வழிபாடு செந்தமிழ் முறையில் தென்னாடு சிவமடத்தினால் நிகழ்த்தப்பட்டது.

*(05-02-2023)* - தைத் திங்கள் நிறைமதி வழிபாடும் 29வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடும் இடம்பெற்றது.

*(15-02-2023)* - யாழ் பல்கலைக்கழகத்தில், ஓதுவார் முருகானந்தம் ஐயா அவர்களினால், பண்ணிசைப் பயிலரங்கம் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகள், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், தென்னாடு நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

*(15-02-2023)* - தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில், தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகள், ஓதுவார் நவரத்தினம் ஐயா, ஓதுவார் முருகானந்தம் ஐயா ஆகியோர் இணைந்து **"திருஎழுக்கூற்றிருக்கை"** பதிகம் விண்ணப்பித்தல் செய்யப்பட்டது.

*(13-02-2023)* - தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலானது கற்றளிக்கோயிலாக உருப்பெற வேண்டி, இடம்பெற்ற ஒரு மண்டலத் திருமுறை விண்ணப்பம் நிறைவு

*(16-02-2023)* - தென்னாடு சிவனடியார்க்கள் கூடி திருக்கேதீச்சரத்தில் தூய்மையாக்கல் திருப்பணி செய்யப்பட்டது.

*(17-02-2023)* - சைவ மாணவர் சபையின் ஐந்தாவது வருட பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும், தென்னாடு நிறுவுனர் சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் தலைமையில் இடம்பெற்றது.





*(18-02-2023)* - தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயில் பெருஞ்சிவனிரவு

ஐம்பூதநாதப் பெருமானுக்கு இரண்டாவது 'பெருஞ்சிவனிரவு பெருவிழா' வெகு சிறப்பாக நான்கு கால திருமஞ்சனப் பூசைகளுடன் சிறப்பாக அடியார்கள் பலரும் சூழ இடம் பெற்றது. நான்கு காலமும், நான்கு வகை திரவியங்களால் திருமஞ்சனம், நால்வகை ஆடை, நால்வகை படையல், நால்வகை இசை என வெகு சிறப்பாக இடம்பெற்றது. மேலும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெற்றது. யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலிலும் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றது. வாரிவனத்தில் பெருஞ்சிவனிரவு அன்று போதொடு நீர்சுமந்து ஏத்தி ஊர்வல வழிபாடு இடம்பெற்றது.

### பங்குனித் திங்கள் - 2023

*(04-03-2023)* - மாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

*(07-03-2023)* - சுபதாசன் அவர்களின் வருகையை முன்னிட்டு மங்களநாதர் திருக்கோயில் சிறப்பு திருமஞ்சன வழிபாடுகள் இடம்பெற்றது.

*(07-03-2023)* - கொக்குவில் இந்துக் கல்லூரி புதிய திருக்கோயில் அடிக்கல் நாட்டல் விழா மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

*(07-03-2023)* - மாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் 30வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடும் இடம்பெற்றது.

*(24-03-2023)* - செல்லப்பா சுவாமிகள் குருபூசை கொண்டாப்பட்டது.

### சித்திரைத் திங்கள் - 2023

*(02- 04-2023)* - தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில், மறைமலை அடிகளார் வழிவந்த, ஒளியகம் ஒளியரசு ஐயா அவர்களினால் தீக்கை வழங்கல் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஐம்பதிற்கும் மேற்பட்ட அடியார்கள் கலந்து கொண்டு தீக்கை பெற்றிருந்தனர்.

*(03- 04-2023)* - தென்னாடு ஏற்பட்டில் யாழ்ப்பாணம் இந்து மகளீர் கல்லூரியில் சிவக்கர சுவாமி மற்றும் ஒளியரசு ஐயாவின் அருளுரைகள் இடம்பெற்றது.

*04,05-04-2023* - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை "தாயுமானவர் சுவாமி " திருக்கோயில் குடமுழுக்கு

நற்செய்கை ஆண்டு, மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 22ம் நாள் *(05-04-2023)* புதனன்று உத்திரம் நாண்மீன், நிறைமதியும் கூடிய நன்னாளில், மாணவச் சிறார்களை சைவத்தமிழ் வழிபாட்டில் ஈடுபடுத்தும் நோக்கில், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் தாயுமானவர் சுவாமியை திருநிலைப்படுத்தி, திருக்குட நன்னீராட்டுச் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகள், சூரிய னார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு. சிவாக்கர தேசிக சுவாமிகள் ஆகியோர் அருளாசிகளுடன் அருட்குருநாதர் ஒளியாகம் ந. ஒளியரசு ஐயா அவர்கள் செந்தமிழ் வேள்வி ஆற்ற, வான் முகில் வளாது பெய்ய, மலிவளஞ் சுரக்க, நற்றவம் வேள்வி மல்கக் குடமுழுக்குக் கண்டார் தாயுமானவர் சுவாமி.

*(05-04-2023)* - பங்குனித் திங்கள் நிறைமதி வழிபாடும் 31வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தருமை ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சிசுந்தரம் சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு. சிவாக்கர தேசிக சுவாமிகள், அருட்குருநாதர் ஒளியகம் ந. ஒளியரசு ஐயா மற்றும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை சிறப்பாகும்.

*(6-04-2023 தொடக்கம் 11-04-2023 வரை)*- தென்னாட்டின் ஏற்பாட்டில் சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு. சிவாக்கர தேசிக சுவாமிகள் மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய தமிழ் பிரதேசங்களில் அருளுரை நிகழ்வுகளை நடத்தினார்.

*(14-04-2023)* - தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலில் மங்கலப் புத்தாண்டு சிறப்பு வழிபாடு இடம்பெற்றது.

*(17-04-2023)* - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை தாயுமானவர் சுவாமி சங்கு நீராட்டு நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றது.

*(17-04-2023)* - சித்திரைத் திங்கள் தேய் பிறைக் கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

*(16-04-2023)* - திருநாவுக்கரசர் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

### வைகாசித் திங்கள் - 2023

*(05-05-2023)* - சித்திரைத் திங்கள் நிறைமதி வழிபாடும் 32வது தென்னாடு திங்கள் இதழ் வெளியீடும் இடம்பெற்றது.

*(17-05-2023)* - வைகாசித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

*(19-05-2023)* - மங்களநாதர் திருக்கோயிலில் மாணவர்களுக்கு கண்டிகை (உருத்திராக்கம்) அணிவித்தல் இடம்பெற்றது.

*(26-05-2023)* - சிதம்பரம், மயிலாடுதுறை மற்றும் மலேசியா ஓதுவார்களால் தென்னாட்டில் திருமுறை விண்ணப்பம் நிகழ்த்தப்பட்டிருந்தது.

தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தில் ஐம்பூதக்கலவையாக எழுந்தருளியுள்ள ஐம்பூதநாதருடன், ஈழத்து சித்தர்கள், பதினெண் சித்தர்கள், நாயன்மார்கள், இராசராச சோழன் என சைவசமயத்தின் அடையாள நாயகர்களும் தவக்கோலமாக எழுந்தருளியுள்ளனர். உலகிலே, ஈழத்து சித்தர்கள் அனைவரிற்கும் ஓரிடமாக கருங்கல் சிற்பங்களாக செதுக்கி எழுந்தருள வைத்திருப்பது இதுவே முதலாவதாகும். இங்கு வந்து அவர்களின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு அமைகிறது.

**"அனைவரும் வருக அப்பனின் அருள் பெறுக"**

**திருச்சிற்றம்பலம்**

**தொகுப்பு - தென்னாடு நிலவன்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்






**“திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்”**

### திருநாவுக்கரசநாயனார் சம்பந்தர் பெருமானை சந்தித்தல்

திருநாவுக்கரசநாயனார் சிதம்பரத்தில் தங்கி யிருந்து, உழவாரத் தொண்டு செய்து வந்த நாட்களில், திருக்கழுமலத்தில் (சீர்காழியில்) வீற்றிருக்கின்ற ஆனேற்றை ஊர்தியாய்க் கொண்ட தோணியப்பரின் திருவருளால், உமையம்மையார், திருமுலைப்பாலுடனே நிறைகின்ற சிவம் பெருகுமாறு வளர்கின்ற ஞானத்தையும் குழைத்து ஊட்ட, அதை உண்டருளிய ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றை அடியவர் உரைப்பக் கேட்டார். ஞானசம்பந்தப் பெருமானின் சிறப்புகளைக் கேட்டவுடனே, அவரை காணும் விருப்பம் கொண்டு, பொன்னம்பல நாதரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு கழுமலம் நோக்கிப் புறப்படடர்.

அப்பர் பெருமான் வழியில் திருநாரையூர் இறைவனை பாடி வணங்கிக் கொண்டு சீர்காழியை அடைந்தார். சிவபெருமான் கொடிய சூலை நோயைத் தந்தருளி நேரே ஆண்டருளிய நாவுக்கரசர் வருகின்றார் என்ற செய்தியைக் கேட்டருளிய ஞானசம்பந்தரும், அவரைக் காண்டற்குப் பெருவிருப்பு மீதூர, அருள் கொண்ட மனமுடைய அடியார்கள் பலரும் சூழ்ந்து வர, எழுந்தருளி அவர் முன்னர் வந்தார். நாவரசரும் தொழுதவாறே அவரையடைந்து, சூழ்ந்து நிற்கும் தொண்டர் கூட்டத்தின் இடையே சென்று, அன்பின் மிகுதியால் உள்ளம் உருக, குற்றம் இல்லாத மீதூர்ந்த காதலுடன் காழிப் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்க, அங்ஙனம் விழுந்து வணங்கிய அவர்தம் கைகளைப் பிடித்துக் கொண்டு, தம் திருக்கைகளால் எடுத்து, அவரைத் தாமும் வணங்கியவராய், ஆனேற்றை ஊர்தியாகவுடைய சிவபெருமானை அழுது அழைத்துத் தம்முன் வெளிப்பட்டு வரக்கண்ட ஞானசம்பந்தரும், **“அப்பரே!”** என்று கூறிட அவரும் **“அடியேன்!”** என்றார்.

இவர்கள் சந்திப்பை, **“கருத்திற் பரவு மெய்க்காதல் தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்று தொழுதே, அண்டரும் போற்ற அணைந்து அங்கு அரசும் எதிர்வந்திறைஞ்சி”** (தி.12 பு.28 ப. 271) என ஞானசம்பந்தர் புராணத்திலும் சேக்கிழார் பெருமான் மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

இரு பெருமக்களும் சேர்ந்த இத்திருக் கூட்டத்தைக் காணும் பேற்றைப் பெற்றதால், சிவனடியார்கள் இன்பம் அடைந்து, தேவர்களும் போற்றி வழிபடுமாறு உலகம் எல்லாம் சிவத்தைப் பெருகுவிக்கும் ‘அரகர’ என்ற ஒலியை நிறைத்தனர். அவ்விருவரும் தாங்கள் ஒருவரையொருவர் காணப்பெற்றதால் உளமகிழ்ந்து, உள்ளம் கனிய அளவளாவினார்கள். பின் இருவருமாய் சீர்காழித் தோணியப்பர் திருக்கோயிலை அடைந்து, வளம் வந்து வணங்கிய பின், சீர்காழிப்பதியில் தோன்றிய ஆளுடைய பிள்ளையார் **“அப்பரே! நீவிர் உங்கள் தம்பிரானரைப் பாடுங்கள்”** என்று கூற நாவுக்கரசரும் பெருகிய நீர் கண்களில் பொழிய, மெய்ப்பொருளாய திருவருள் நலம் பொருந்திட, தோணியப்பரின் திருமுன்பு நின்று, அன்புகூரும் செந்தமிழ் மாலையாகப் பத்திமை மிகப் **“பார் கொண்டு மூடி”** (தி.4 ப.82) எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருக்கோயிலிருந்து நீங்கி நாவுக்கரச பெருமானும், சம்பந்தருடைய திருமடத்தை அடைந்து மன நெகிழ்ச்சியுடன் அங்கே சில நாட்கள் தங்கினார். இவர்கள் இருவரும் இப்பதியிலிருந்த பொழுது அப்பர் பெருமான் **“படையார் மழு”** (தி.4 ப.83) எனத் தொடங்கும் திருவிருத்தம் (இப்பதிகத்துள் இப்பாடல் ஒன்றே கிடைத்துள்ளது), **“மாதியன்று”** (தி.5 ப.45) எனத் தொடங்கும் திருக்குறுந்தொகை ஆகியவற்றையும் பாடியுள்ளார். சில நாட்கள் கழித்து, அப்பர் பெருமான் சோழ நாட்டுத் திருத்தலங்களை வழிபட விருப்பம் கொண்டு, சம்பந்தருடன் சென்று திருக் கோலாக்காவை வணங்கி, திருக்கோலாக்காவில் ஞானசம்பந்தருக்கு விடைகொடுத்து தனது திருத்தல பயணத்தைத் தொடர்ந்தார்.

### திருநாவுக்கரப்பெருமான் திருநல்லூரில் திருவடி தீக்கை பெறல்

திருஞானசம்பந்தரிடம் இருந்து விடைபெற்ற அப்பர் சுவாமிகள் திருக்கருப்பறியலூர், திருப் புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநன்றியூர், திருநனிப்பள்ளி முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, காவேரியாற்றின் இருகரை வழியாகவும் சென்று திருச்செம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருவெதிர் கொள்பாடி, திருக்கோடிக்கா, திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சரம், திருப்பழை யாறை என்கின்ற தலங்களைப் பணிந்து பாடி திருச்சத்திமுற்றத்தை அடைந்தார். அங்கே எம்பெருமானை வணங்கிக் கொண்டு **“கோவாய் முடுகி”** எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடவும், இறைவரும் **“நீ திருநல்லூருக்கு வா”** எனக் கூறியருள, திருநாவுக்கரசரும் மகிழ்ந்து வணங்கிய படி திருநல்லூரை அடைந்தார்.

திருநல்லூரில் நிலையான திருத்தொண்டை ஆற்றிவரும் நாவரசர், இறைவனை வணங்கி மகிழ்ந்து எழும் பொழுதில், சிவபெருமான் **“உம் நினைவை யாம் முடிக்கின்றோம்”** என்று அருள் செய்து, திருநாவுக்கரசரின் தலைமீது தம் திருவடிகளைச் சூட்டியருளினார். உளமகிழ்ந்த அப்பர் பெருமான், **“நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்”** எனும் பொருள் அமைந்த,

**“நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்**
**நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்**
**சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்**
**செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்**
**இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற**
**இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி**
**நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்**
**நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே”** (தி.6 ப.14 பா.1)

எனும் திருத்தாண்டகத்தால் போற்றித் துதித்துப், புனிதரான இறைவரின் திருவருளை எண்ணி மனம் உருகி, நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்தார். இன்னும் சில திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, சில நாள் நல்லூரில் தங்கியிருந்தார். இருக்கு நாட்களிலே, திருக்கருகாவூர், திருப்பாலைத்துறை முதலாகிய தலங்களுக்குப் போய், எம்பெருமானை வழிபாடு செய்து கொண்டு திருநல்லூருக்குத் திரும்பிவிடுவார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் (177 - 198)**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு வண்டுவார் குழலியம்மை உடனுறை மாணிக்க வண்ணர் திருக்கோயில் – திருமருகல்

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 29 ஆவது திருக்கோயில் – திருமருகல்)



**"எரியார் சடையும் அடியும் இருவர்தெரியாததொர் தீத் திரளாயவனே மரியார் பிரியா மருகற் பெருமானே!"**

தமிழ் ஞானக்குழந்தையாகிய திருஞான சம்பந்தப் பெருமான், பெண்ணின் துயர் நீங்கிட, "பெருமானே! இந்த ஒளி பொருந்திய அணிகளை அணிந்த பெண்ணின் உள்ளம் மெலிவதான துன்பம் உனக்குத் தகுதியாமோ?" என்று தொடங்கிப் பாடிய பொழுதில், இறைவன் திருவருள் கொண்டு அரவம் தீண்டிய வணிகனை உயிர்ப்பித்து, திருமணம் நடத்தி வைத்தார். அவ்வாறே திருமணத் தடைகளை நீக்கும் அற்புதத் தலமே, வண்டுவார் குழலியம்மை உடனுறை மாணிக்க வண்ணர் பெருமான் உறையும் திருமருகல் திருத்தலம்.

**அமைவிடம்: நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ்நாடு**
நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே ஏழு கி.மீ. தூரமுள்ள திருப்புகலூ ரையடைந்து, அங்கிருந்து மட்சாலை வழியாகக் கிழக்கே ஐந்து கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.

**இறைவர் திருப்பெயர்: மாணிக்க வண்ணர், இரத்தினகிரீசுவரர், திருமருகன். இறைவியார் திருப்பெயர்: வண்டுவார் குழலி, ஆமோதள நாயகி.**
**கோயில் மரம்: மருகல் மரம் (வாழையில் ஒருவகை)**
**தீர்த்தம்: மாணிக்க தீர்த்தம் (இலட்சுமி தீர்த்தம்).**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிழார், திருமகள், திருமால், நான்முகன் முதலியோர்**
**பாமாலை: திருஞானசம்பந்தர்,திருநாவுக்கரசர்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**
**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே. (2-18)

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே. (1-6)

**திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்**

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே. (5-88)

**திருத்தலச் சிறப்பு**

அரவம் தீண்டி இறந்தவரை ஞானசம்பந்தப் பெருமான் **"சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்"** எனும் பதிகம் பாடி உயிர்ப்பித்து, இறைவனின் திருமுன்னிலையில் திருமணம் செய்து வைத்த தலம், வறுமைப் போக்கும் தலம், திருமகள் தாயார் தவமியற்றி திருமாலை அடைந்த தலம், சனிக் கோளின் உக்கிரம் போக்கும் தலம், நான்முகன் தவமியற்றிய தலம் என எண்ணிலடங்கா திருவருள் சிறப்புகளைக் கொண்டது இத்திருத்தலம்.

அப்பர் பெருமானால் ஒரு பதிகமும், சம்பந்தர் பெருமானால் இரு பதிகமும் என இரு பெரும் அடியார் பெருமக்களால் பாடப்பட்ட இத்திருத்தலத்தில் திருவடியும் திருமுடியும் நின்ற சூழல் அறிய அரியவனாக விளங்கும் இறை பரம்பொருள், இத்தலத்தில் அருள்மிகு மாணிக்கவண்ணர் என்ற திருப்பெயருடன், சுயம்பு இலிங்கமாகக் காட்சியளிக்கிறார். வடமொழி பெயராக இறைவனுக்கு இரத் தினகீரிசுவரர் என்ற பெயர் விளங்குகிறது. அன்னை ஆதிசத்தி, அருள்சொறியும் திருவுருவில் அருள்மிகு வண்டுவார்குழலி என்ற திருப்பெய ருடன், தனி சன்னதிக் கொண்டு தென்முகம் நோக்கிக் காட்சியளிக்கிறார். அன்னைக்கு வடமொழி பெயராக ஆமோதள நாயகி என்ற பெயர் குறிப்பிடப்படுகிறது.

திருமணத்திற்கு சாட்சியாக வந்த இறைவன்: வணிகன் ஒருவனும் வணிகப்பெண் ஒருத்தியும் திருமணம் முடிக்க, மதுரைக்கு செல்லும்போது திருமருகல் வருகிறார்கள். இரவாகி விடுகிறது. அன்றிரவு இத்தலத்தருகே உறங்குகின்றனர். அப்போது வணிகனை பாம்பு தீண்டி விடுவதால் இறந்து விடுகிறான். உடன் வந்தவள் சத்தம் போட்டு அழும் குரல் கேட்டு, அவ்வழியே வந்த சம்பந்தர் பெருமான் என்ன என்று வினவ இவள் விபரம் கூறுகிறாள். சம்பந்தர் பதிகம் பாடி விடத்தை போக்குகிறார். சுவாமியே வன்னிமரமாகவும், கிணறாகவும், வாழை மரமாகவும் இருந்து திருமணத்திற்கு சாட்சியாக இருந்து செய்து வைக்கிறார். ஆனால் மதுரையில் இருந்த அந்த வணிகனின் தாய் தந்தையார் இதை நம்ப மறுக்கவே அந்த வணிகன் சுவாமியை நினைத்து தியானிக்க சுவாமியும் மதுரையில் வன்னி, கிணறு வடிவில் காட்சி தந்தார். மதுரையில் நடந்த சிவபெருமானின் இந்த திருவிளையாடலுக்கு காரணமாக அமைந்த தலம் இது.

**திருத்தல வரலாறு**

முன்னொரு காலத்தில் மருகல் நாட்டை குசகேது என்ற மன்னன் ஆட்சி செய்துள்ளான். ஒருமுறை இப்பகுதியில் காடு திருத்தும் பணி நடைபெற்றபோது, சுயம்புவாக தோன்றியிருந்த சிவலிங்கத் திருமேனியின், பாணத்தில் மண்வெட்டி பட்டு குருதி பீறிட்டுள்ளது. இதையறிந்த மன்னன் ஓடோடி வந்து, மனம் மொழி மெய்களால் இறைவனைத் துதித்து, இறைத் திருவருளால் எழுப்பித்த திருக்கோயிலே, இக்கோயில் எனப்படுகிறது.

நீதி நெறி தவறாத குசகேது மன்னன் ஆட்சிக் காலத்தில், விதியின் பயனாக கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. 9 ஆண்டுக் காலம் மழையில்லா ததால் மக்கள் சொல்லொண்ணா துயரத்துக்கு உள்ளாகினர். பசிப் பிணியாலும் வாட்டிய வறுமையாலும் மக்கள் நீதி நெறிகளைப் புறந்தள்ளினர். இதனால், மனமுடைந்த மன்னன் குசகேது, மக்களின் பசியைப் போக்க முடியாமல், மக்களை நீதி நெறி நடத்த முடியாமல் வாழ்வதை விட, இறப்பதே மேல் எனக் கருதி, தன் துயரை எல்லாம் இறை திருமுன் நின்று கதறிய அவன், இறுதியில் தூக்கிட்டுத் தற்கொலைக்கு முயன் றான்.

தன்னலம் கருதாமல், தன் குடிகளின் நலனுக் காக தன்னுயிரையும் துறக்கத் துணிந்த மன்ன னைத் தடுத்தாட்கொண்டு, சிவகணங்களுடன் காட்சியளித்த சிவபெருமான், மருகல் நாட்டின் வறுமை தீர திருமருகல் மற்றும் சுற்றுப் பகுதிகளில் மாணிக்கம், நெல், முத்து, நீர் ஆகிய மழைகளைப் பொழியச் செய்து அருளியுள்ளார். மாணிக்க மழை பெய்யச் செய்து மக்களின் வறுமையைப் போக்கிய வள்ளல் என்பதால் இத்தல இறைவனுக்கு அருள்மிகு மாணிக்கவண்ணர் என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

**திருக்கோயில் அமைப்பு**

இக்கோயில்கோச்செங்கோட்சோழனின் திருப்பணியுடன் மாடக்கோயிலாக அமைந் துள்ளது. இரு வீதிகள், 5 நிலை இராசகோபுரம், அதன் எதிரே நீராழி மண்டபத்துடன் கூடிய தீர்த்தம் என எழில் சூழ் திருத்தலமாக உள்ளது இத்தலம். மருகல் என்ற வாழை நிறைந்திருந்த பதி என்பதால், இப்பகுதிக்கு திருமருகல் எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

கோயிலின் முன்பாக குளம் (இலட்சுமி தீர்த்தம்) உள்ளது. இராச கோபுரத்தை அடுத்து கொடி மர விநாயகரைக் கொண்ட கொடி மரம் உள்ளது. மூலவர் மாணிக்கவண்ணர் சன்னதியின் வலது புறம் இளமுருகு உடனுறை யும் அம்மையப்பர் (சோமாஸ்கந்தர்) சன்னதி உள்ளது. மூலவர் சன்னதியின் நுழைவாயிலின் வலப்புறம் சனி தேவன், எழுந்தருளல் விநாயகர்,



இடது புறம் செட்டிப்பெண், செட்டிப்பிள்ளை ஆகியோர் உள்ளனர். திருச்சுற்றில் செட்டிப் பெண், செட்டிப்பிள்ளை திருமண மண்டபம், பைரவர், சந்திரன், சூரியன், ஒன்பான் கோள்கள், நாகர், செட்டிப்பெண், செட்டிப்பிள்ளை, சம்பந்தர், சண்டிகேசுவரர் சன்னதிகளும், அடுத்து தில்லைக்கூத்தன் சன்னதியும், வண்டுவார்குழலி (ஆமோதளநாயகி) சன்னதியும் உள்ளன.

அம்மன் சன்னதியின் திருச்சுற்றில் யமுனா சண்டிகேசுவரி சன்னதி உள்ளது. கருவறையைச் சூழ விநாயகர், ஆலமர்கடவுள் (தட்சிணா மூர்த்தி), அண்ணாமலையார், நான்முகன், மலைமகள் உள்ளனர். வெளிச்சுற்றில் மேலும் பல திருமுன்களும் உள்ளன. 11 செப்டம்பர் 1974இல் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றதற் கான கல்வெட்டும் இங்கு உள்ளது.

திருமணத் தடைகள் நீங்கி திருப்தி அடைய திருமருகல் செல்லுங்கள். சிவபிரான் காதலித்து உறையும் பதிகள் வரிசையில் உள்ள திருமருகல் செல்லுங்கள் திண்ணம் கொள்ளுங்கள்.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 (70) 770 1111 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி

## யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீசுவரன் கோயில்

ஈழத்தின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண தலைநகரில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப் புக்களுடன் விளங்கும் சிவன் கோயில்களுள், காலத்தால் பிந்தியதும், பல வரலாற்றுச் சிறப்புக்கள் பொருந்தியதுமாகத் திகழ்வது வண்ணை வைத் தீசுவரன் கோயில் ஆகும். இக்கோயில் யாழ்ப்பாண நகரின் கே.கே. எஸ் வீதியில் அமைந் துள்ள அரும்பெரும் சிறப் புடைய கோயிலாகும்.



### திருத்தல வரலாறு

தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு குடியேறிய, வைத்தியலிங்கச் செட்டியாரின் தந்தையான கோபாலச் செட்டியாரால், தெற்கே வேம்படி பிள்ளையார் கோயில், கற்கட்டு வைரவர் கோயில், பண்ணை முத்துமாரி அம்மன் கோயில், வடமேற்கே ஐயனார் கோயில், காளி கோயில் ஆகியவற்றை துணைக் கோயில்களாகக் கொண்டு வண்ணை வைத்தீசுவரன் கோயில் நிர்மாணிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் இக் கோயில் 'செட்டியார் சிவன் கோயில்' என்று அழைக்கப்பட்டு, பின்பு மகனின் திருப்பணிகளால் வைத்தீசுவரன் கோயில் என்று பெயர் பெற்று விளங்குகிறது. அன்று முதல் இன்று வரை இச் செட்டியார் பரம்பரையினரே இக்கோயிலை மேற்பார்வை செய்து வருகின்றனர்.

ஈழத்தை ஒல்லாந்தர் தங்கள் அதிகாரங்களுக்குள் வசப்படுத்திய கால கட்டத்தில், ஒல்லாந்த தேசாதி பதிக்கும் கோபாலச் செட்டியாருக்கும் வர்த்தகம் மூலம் நற்தொடர்புகள் உண்டாகியது. தேசாதிபதிகளும் தங்களுக்கு வேண்டிய விலை உயர்ந்த பொருட்களை எல்லாம் செட்டியாரின் உதவியுடனே வாங்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இதனால் கோபாலச் செட்டியார் ஊரில் நன்மதிப்பு பெற்ற செல்வந்தராக விளங்கினார். இந்நாட்களில் தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த, திருக்கைலாய பரம்பரைத் திருப்பனந்தாள் மடத் தம்பிரான் சுவாமிகளாயிருந்த கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளின் தொடர்பும் வாய்க்கப் பெற்றது. நாளடைவில் கூழங்கைத் தம்பிரானை தனது அருட்குருவாகக் கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது. இந்த நிலையில் செட்டியாருக்கு பிறந்த மகனைப் பார்த்து தம்பிரான் அவர்கள் **"இவன் பெரும் கருமங்கள் முடிக்கப் பிறந்திருக்கிறான். இவனைச் செவ்வனே பாதுகாத்திடக் கடவாய். இவன் பெயர் வைத்தியலிங்கன்"** என்று கூறி அருள் புரிந்தார்.

இவ்வாறு தம்பிரான் சுவாமிகளின் வழிகாட்டுதலில் வளர்ந்த வைத்திலிங்கச் செட்டியார், ஒல்லாந்தர் களுடனும் நெருங்கிய தொடர்பை பேணி வர்த்தக அடிப்படையிலும் நல் முன்னேற்றம் கண்டார். பின்பு ஒல்லாந்தர் விட்டுச் சென்ற முத்துக்குளிப்பு குத்தகையையும் தானே எடுத்து நடாத்தி வருமானம் கண்டார். பின்பு 1787 ஆம் ஆண்டளவில் வைத்திலிங்கச் செட்டியார், தனது குருவான கூழங்கைத் தம்பிரானின் அருளாசிப்படி வைத்தியநாதப் பெருமானையும், தையல்நாயகி அம்மனையும் ஆகம விதிப்படி நிலைப்படுத்தினார். பின்னர் பொறுப்புக்களை தமது மகன்களாகிய கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார் ஆகியோர் இடத்தில் ஒப்படைத்து, தனது இறுதிக் காலத்தை காசித் தலத்தில் கழித்து இறைவனடி சேர்ந்தார்.

1987 ஆம் காலகட்டத்தில் இலங்கையில் ஏற்பட்ட போர்ச்சூழலில் இத்திருக்கோயிலும் குண்டு வீச்சு தாக்கத்தால் சேதமுற்றிருந்தது. பின்பு செட்டியார் குடும்ப சந்ததியினராலும், சிவநேசச் செல்வர்களின் அர்ப்பணிப்பாலும் சேதமுற்ற சிவன் கோயில் புதுப்பொலிவுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, 2002 ஆம் ஆண்டு திருக்குட நன்னீராட்டு பெருவிழா செய்விக்கப்பட்டது. அதன் பின்பு 2013 ஆம் ஆண்டு மீண்டும் திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது. மீண்டும் 2023 ஆம் ஆண்டு வைத்தியலிங்கச் செட்டியாரின் ஏழாவது பரம்பரையினரால் திருக்குட நன்னீராட்டு நடாத்தப்பட்டது.

### திருக்கோயில் அமைப்பு

வண்ணை வைத்தீசுவரன் சிவன் திருக்கோயில் முற்றிலும் சிவாகமம் கூறும் விதிக்கமைவாகவும் தென்னிந்திய சிற்ப விதிப்படியும் நிர் மானிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக காவிரி நாட்டிலி ருந்து வருகை தந்த விசுவகர்மா குலத்தின் வழிவந்த சிற்பிகள் கோயில் திருப்பணி செய்யும் காலத்தில், தாங்கள் வழிபடுவதற் கென்று தங்கள் குலதெய்வமான காளிதேவிக்கு கோயில் அமைத்தி ருந்தமையும், அதனால் அவ் விடம் இன்று கண்ணாதிட்டி என்று அழைக்கப்படுகின்றமை யையும் கூறலாம். மூர்த்தியான வண்ணை வைத்ததீசுவரப் பெரு மானுக்கு கிழக்கு நோக்கியதாக விமானத்துடன் பொலிந்த கருவறையும், தையல்நாயகிக்கு தெற்கு நோக்கியதாகவும் தனித் தனியாக அமைக்கப்பட்டுள்ளன. கருவறையின் புறச்சுவரில் அமைக் கப்பட்டிருக்கும் இறைபடிமங்களில் ஆலமர்கடவுள் (தட்சணாமூர்த்தி), நான்முகன், பெருஞ்சோதியன் (இலிங்கோற்பமூர்த்தி) ஆகியோரின் திருவுருவங்கள் சிற்ப விதிமுறைப்படி அமைக்கப்பட்டுள்ளது.

இறைவன் இறைவியின் கருவறைகளோடு இணைந்து அர்த்த மண்டபம், முக (மகா) மண்டபம், நிருத்த மண்டபம், கொடிமர மண்டபம் என்பன அமைந்துள்ளன. மற்றும் கிழக்கு நோக்கிய சந்நிதியோடு அமைந்த இக்கோயில் மூன்று வீதிகளைக் கொண்டுள்ளது. இதில் மூன்றாம் வீதி, தெரு வீதியில் தமிழ்நாட்டுப் பாணியில் 16 கால்களுடன் கூடிய மண்டபம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இக் கோயிலுக்கு மேலும் அழகை கொடுப்பதிலும் புண்ணியத்தை ஊட்டுவதிலும் சிறந்த அமைப்பாக, வண்ணை வைத்தீசுவரப் பெருமானின் இராசகோபுரம் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தீர்த்தமாக, வண்ணை மேற்கில் உள்ள வில்லூன்றி எனும் சமுத்திர சங்கம தீர்த்தம் காணப்படுகின்றது.

### சீர்வளர்சீர் ஆறுமுகநாவலரின் சொற்பணி (பிரசங்கம்)

ஈழத்தின் சைவப் பாதுகாவலர் என்று போற்றப்படும் நல்லை நகர ஆறுமுக நாவலர் பெருமான் சைவசமயத்தை மறுமலர்ச்சி அடையச் செய்வதற்கு ஏராளமான தொண்டுகள் புரிந்தார். அந்த வகையில், சைவமென்றும் செஞ்சாலி வளரும் பொருட்டுப் வண்பண்ணை சிவன் கோயிலில் பிலவங்கம் வருடம் மார்கழித் திங்கள் வெள்ளிக்கிழமையும் சுவாதி நாண்மீனும் கூடிய நன்னாளில், முதல் அருட்சொல் மழையைப் பொழிந்தார். அந்நாள் முதலாக, ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவுகளில், தவறாமல் சைவப் பண்பாடுகளை வெளிப்படுத்தி வந்தார். இவரோடு கார்த்திகேய ஐயரும் இப்பணியை ஆற்றிவந்தார். இதனால் அடியார் மத்தியில் சைவப் பயிர் முளையுண்டு வளர்ச்சி பெறலாகிற்று. ஈழத்துக் கோயில்களில் சைவத்தமிழ் சொற்பொழிவு முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சிவன் கோயில், வண்ணை வைத்தீசுவரர் சிவன் கோயில் என்ற பெருமையையும் சிறப்பினையும் பெறுகின்றது.

நாவலர் பெருமானைத் தொடர்ந்து அவரின் மருமகனும் மாணவருமாகியவரும், யாழ் சைவபரிபாலன சபையின் முதல்த் தலைவருமாகிய ந.ச. பொன்னம் பலப்பிள்ளை அவர்களும் இக்கோயிலில் பல தொண்டுகளைப் புரிந்துள்ளார்.இக்கோயில் எழுந்தருளல் மண்டபத்தில் (வசந்த மண்டபம் )பெரியபுராணம், கந்தபுராணம் ஆகிய புராணங்களுக்கான விரிவுரைகளை நடாத்தினார்.

இத்தகு சிறப்புக்கள் பொருந்திய வைத்தீசுவர நாதனின் பெருமை தனை கலாபூஷணம் க. சிற்றம்பலம் அவர்கள் பின்வருமாறு பாடிப் போற்றியுள்ளார்.

**"நீறுடனே யுருத்திராக்கம் நிலவிடமும் நம்சைவம்**
**வீறுநடை யுடன்நிகழ விடிவு செய்த நாவலனார்**
**ஆறிடவும் தேறிடவும் அருள் துணையாய்க் கைகொடுத்துப்**
**பேறு தந்த வைத்தீசப் பெருமானைப் போற்றுமினே"**

### பூசைகளும் விழாக்களும்

இக்கோயிலில் தினம் தோறும் ஆறு காலப் பூசைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வருடம் தோறும் பங்குனித் திங்கள் உத்தரத் திருநாளில் நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் சிவன் திருவிழா முடிவடையும். அதுபோல ஆடித் திங்கள் பூரத் திருநாளில் நிகழும் தீர்த்த திருவிழாவோடு அம்மன் திருவிழாவும் நிறைவு பெறும். சிவன் திருவிழாவின் ஒன்பதாம் நாள் இறைவன் கல்யாண சுந்தரராக சமயகுரவர் நால்வருக்குக் அருள் கொடுக்கும் விழாவாக நடைபெறும். அதே போல் அம்மன் திருவிழாவில் ஏழாம் நாள் மிகச் சிறப்புடையது. அம்மை நாக வாகனத்தில் அமர்ந்து சிவனுக்குப் பூசை புரியும் காட்சி அருமையான பத்தி நிகழ்வாக அமையும். தீர்த்த திருவிழாவிற்கு மறுநாள் இறைவனுக்கும் இறைவிக்கும் திருவூஞ்சல் திருவிழா நடைபெறும். அத்தருணம் தையல்நாயகி திருவூஞ்சல் பாடல் பத்தியோடு ஓதப்படும்.



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

மற்றும் சிவனிரவு, ஒன்பான் இரவுகள் என்பவும் சிறப்பான பூசை வழிபாடுகளுடன் நடைபெற்று வருகின்றன. மார்கழி திருவாதிரைத் திருவிழா, திருவெம்பாவை மற்றும் திருவாதிரை நாளன்று திருமஞ்சன அருட்காட்சி வழிபாடுகளுடன் மாலைப் பூசை வழிபாடுகளில் மாணிக்கவாசகர் பெருமானை நடேசர் சந்நிதியில் எழுந்தருளல் செய்து, அவரின் தெய்வீக வரலாற்றைக் கூறும் திருவாதவூரடிகள் புராணம் படித்துப் பயன் சொல்லும் வழக்கமும் நடைபெற்று வருகின்றன.

### திருத்தல இலக்கிய வரலாற்றுக் குறிப்பு

திருத்தலத்தின் காணி சம்பந்தமான உறுதிகள் 1839 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக உள்ளது. சில ஆவணங்கள் டச்சு மொழியில் 1791 ஆம் ஆண்டு வரையப்பட்டுள்ளது. இவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பும் உள்ளது. இவையெல்லாம் இக்கோயிலின் பழமைத் தகவல் களை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இக்கோயிலின் வரலாற்றுப் பதிவுகள் அடங்கிய கோவை ஒன்றை ஆலய பரிபாலன சபை 26-04-2023 அன்று வெளியிட்டுள்ளது.

இச் சிவன் கோயிலின் மூர்த்தியின் கீர்த்தியினை யாழ்ப்பாணப் புலவர்கள் பலர் போற்றிப் பரவியுள்ளனர். அவற்றுள் கூழங்கைத் தம்பிரான் பாடிய தனிக்கவிப் பாடல் சிறப்புப் பெற்றது. யாழ் சைவ பரிபாலன சபை வெளியீடாக தையல் நாயகி கலி வெண்பாவும், முத்துக்குமார சுவாமி திருவூஞ்சல் ஆகிய குறிப்புகளும் வெளிவந்துள்ளன. அராலியைச் சேர்ந்த விசுவநாத சாத்திரியார் வண்ணைக் குறவஞ்சியும் பாடியுள்ளார். மற்றும் மார்கழி திங்கள்த் திருவாதிரை நாளில் ஓதப்படும் வைத்தீசுவரன் திருவூடல் பாடலும் சிறப்பு வாய்ந்தது. அது 1972 ஆம் ஆண்டு அச்சில் வெளிவந்தது. முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம் அவர்கள் பழந்தக்கராகப் பண்ணில் வைத்தீசுவரர் உடனுறை தையல்நாயகி மீது பதிகம் ஒன்றைப் பாடியுள்ளார்.

**"வண்ணையிலே கோயில் கொண்ட வைத்தீசப் பெருமானார்**
**கண்ணெனவே தையலுடன் கடுநடை செய் விடையேறி**
**அண்ணலென அப்பனென அடியார்கள் புடை சூழ**
**புண்ணியஞ் செய் வானிருந்தான் போற்றி யேந்தித் தொழுவீரே"**

யாழ்ப்பாணத்து தேசத்துச் சைவக்கோயில்கள் பல போர்த்துக்கேய படைகளால் தகர்க்கப்பட்டும், சைவ சமய வழிபாட்டுச் சுதந்திரங்கள் மறுக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வந்த சூழ்நிலையில் ஒல்லாந்தர் காலத்தின் நடுப்பகுதியில் ஈழத்தில் சைவ சமயம் புத்தெழுச்சி பெறுவதற்கு முன்னோடியான திருக்கோயிலாக வண்ணை வைத்தீசுவரன் கோயில் திகழ்ந்தது என்பதில் எவருக்கும் திகைப்பில்லை. சுருங்கக் கூறின் நாவலர் பெருமான் இத்தலத்தில் தான் தனது கன்னிச் சொற்பொழிவுக் கலையை தொடங்கி யாழ்ப்பாணத்துச் சைவர்களிடையே மங்கிக் கிடந்த சைவ உணர்வை கிளர்ந்தெழச் செய்தார். இதனால் அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து சைவத்தை மீட்டெடுத்த விடுதலைப் புரட்சியின் சின்னமாக வண்ணை வைத்தீசுவரர் கோயில் விளங்குகிறது என்று கூறலாம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

**திருச்சிற்றம்பலம்**

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆனித் திருமஞ்சன வழிபாடு (25-06-2023)



யாழ் பல்கலைக்கழக திருவாசக முற்றோதலில் தென்னாட்டு குழுவினர் (23-06-2023)



ஆலவாய் அண்ணல் தேவாரப் பாடசாலையில் கௌரவம்



மாணிக்கவாசகர் குருபூசை (23-06-2023)



திருஞானசம்பந்தர் குருபூசை (05-06-2023)



அருளம்பலம் சுவாமிகள் குருபூசை (27-06-2023)



வைகாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (03-06-2023)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் முப்பத்து நான்காவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 18ம் நாள் நிறைமதி அன்று (03-07-2023 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org